ஸ்ரீ தேசிக வந்தந மாலிகை 4.

ஸ்ரீ:

ஸஜ்ஜநாராதனம்

(இரண்டாம் பாகம்)

மீமாம்ஸார்ணவ, மீமாம்ஸாகேஸரி, பூர்வோத்தர
தந்த்ரப்ரதீப, தேசிகதர்சந துரந்தர, பண்டிதராஜ
ஏடூர் இம்படி திருமலை லக்ஷ்மீ[illegible]ார
கோடிகன்யகாதாநம்
திருவரங்கம் திருமலை தாதாசாரியர்
ந்யாய மீமாம்ஸா சிரோமணி, M. O. L.
எழுதியது.

கரஹூ புரட்டாசி மீ வெளிவந்த
ஸ்ரீராமாநுஜன்-தனிமலருக்கு
ப்ரதிவசனம்.

[illegible]நிவாஸ ப்ரஸ், திருவையாறு.
1952

பரிசிஷ்டம்.

1) அநிர்தேசியமான ஒரு ஆபாஸச் சுவடியில் "இக்காலத்து மனிதர்கள் பரஸ்பரம் செய்துகொள்ளும் நிந்தைகளில் ஸாஹஸமாகப் பூர்வாசார்யர்களைப் பிடித்திழுத்து நிந்திக்குமிந்த....கோஷ்டியாருக்காக நாம் பூர்வாசார்ய நிந்தையில் சிறிதும் நெஞ்சை செலுத்தமாட்டோம்" என்று எழுதி உடனே ஸ்வபாவஸித்தமான தேசிக நிந்தாகைங்கர்யத்தைச் செய்ய ஆரம்பித்து தேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரயஸாரத்தில், "விஷ்ணும் க்ராந்தம்" என்ற ச்ருதி வாக்யத்தை அப்புறமே எடுத்திருப்பது ச்ருதி வாக்யங்களை உதாஹரிப்பதில்லை என்று அவர்கொண்ட நியமத்திற்கு விருத்தமென்றும் 'குரவர் (அதாவது தேசிகன்) இங்கு மருண்டு போனார்' என்றும் தூஷித்திருக்கின்றார்கள். "தோன்றியதைச் சொல்லி ப்ரமாதமாய் நிந்தித்துவிட்டு புத்திமான்கள் கொடுக்கும் ப்ரபலப்ரஹாரங்களைப் பலதடவைப் பெற்றிருக்கிறோமே" என்ற உணர்ச்சி சிறிதாவது இருக்குமாகில் இப்படி தைர்யமாய் எழுதமாட்டார்கள். நிர்லஜ்ஜதா நமஸ்காரத்தை இங்கு (16-ம் பக்கத்தில்) இரண்டே ச்லோகங்களால் செய்திருக்கின்றோம். ஒரு சதகமோ ஸஹஸ்ரமோ இயற்ற வேண்டும் போலிருக்கின்றது. **𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌂 𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌃** என்பது ச்ருதி அல்லது மஹாபாரத ச்லோகம் என்ற ஏதோ ஒரு பக்ஷத்தைக் கொள்ளவேணும். ச்ருதி என்னில் நியமமே ஸித்திக்காது. 'ச்ருதி வாக்யங்களை உதாஹரிக்கிறதில்லை' என்று ஸ்வாமியின் கண்டோக்தி யில்லை. அநுமாநம் பாதிதம். மற்ற விடங்களில் ஏன் ச்ருதியை உதாஹரிக்கவில்லை எனில் ஏன் உதாஹரிக்க வேண்டும்? அர்த்தத்தில் விசேஷமில்லை. அதனால் உதாஹரிக்கவில்லை. இங்கு விசேஷம் சொல்ல வேண்டியிருந்தது. அதனால் உதாஹரித்தது. இனி மஹாபாரத வசநமென்னில் நியமமும் ஸித்திக்கிறது. அதற்கு பங்கமுமில்லை. [illegible] ? இனி ஒரு ரஹஸ்யத்தை வெளியிடுகிறோம். '[illegible]' என்று உபக்ரமித்த இதிஹாஸத்தில் நிபத்தமாகையாலே இதற்கு த்வயாதி

[தொடர்ச்சி 68-ம் பக்கத்துக்கு மேல் பார்க்கவும்]

ஸ்ரீ:

ஸஜ்ஜநாராதநம்.

[இரண்டாம் பாகம்.]

4. ஸமாதானம்

(மூன்றும் ப்ரகரணம்)

1) **வாதாசனவரரிவரென வருமா பாஷ்யம் வகைபெறு நாள்** என்றவிந்த தேசிகன் திருநாள் பாட்டின் முதல் வாக்யத்தில் பதஞ்ஜலி முனிவரும் அவர் செய்த மஹாபாஷ்யமும் கருதப்பட்டிருப்பதாக வைத்து ஒருவர் பொருள் கூறியதைக் கண்டித்து பகவத்பாஷ்யகாரருக்கும் ஸ்ரீபாஷ்யத்திற்குமே இங்கே விவக்ஷை என்று ஸ்தாபிக்கப் பார்க்கின்றனர். பாட்டின் வாஸ்தவார்த்தத்தைப் பற்றிச் சிந்தையின்றி கேவலம் தூஷணருசி விசேஷத்தால் சொல்வதே இது. அந்த வித்வானே இந்த அர்த்தத்தைச் சொல்லியிருந்தால் இதைக் கண்டித்து அதுவன்று அர்த்தம் என்றிருப்பார். கொஞ்சம் அவதானத்தோடு யாராவது ஒருவர் இரண்டு அர்த்தங்களையும் சொல்லியிருப்பராகில் ஸமீசீநமான ஓர் அர்த்தம் இருக்க விரஸமாய் இன்னொன்றையும் எதற்காகச் சொல்வது; க்ரந்த விஸ்தரமே இவர்களுக்கு உத்தேசயமென்பர். இதுவன்றி உண்மையில் இது பொருளென்று காண, அதவா ஆலோசிக்கத் தோன்றும்படியான சிக்ஷை இவர்களுக்கு எவ்விதத்திலுமில்லை. புநருக்தியைப் பரிஹரித்திருக்கும் அழகைப்பற்றி கல்பாவஸாந காலம் வரை சிரித்தாலும் பர்யாப்தி இராது. [illegible]ப் பொருளைப் பார்ப்போம். பகவத் ராமாநுஜ ப[illegible]த்[illegible]ஷ்யம் என்பது எப்படியோ அப்ப[illegible] மஹாபாஷ்ய[illegible]து வ்யாகரண

பாஷ்யத்திற்கு ரூடமான பெயர். மஹாபாஷ்யம் என்பது தமிழில் மாபாஷ்யம் எனப்படுகிறது. ஆகவே மாபாஷ்யம் என்பது ரூடிசக்தியினால் பாதஞ்ஜல பாஷ்யத்தைக் குறிக்கின்றது. ஸ்ரீபாஷ்யத்தை இது குறிப்பதானால் யோக சக்தியினால் தான் குறிக்கவேண்டும். இந்த இரண்டு சக்திகளில் ரூடி ப்ரபலம். யோகாத் ரூடிர் பலீயஸீ। இப்படி சப்த சக்தியினால் மஹாபாஷ்யம் தோற்றுகிறது என்பது சாஸ்திர பரிசயமுள்ளவர்கள் ஆக்ஷேபிக்கக்கூடிய விஷயமன்று. இனி இங்கு அதற்குப் பொருத்தமில்லையாகையால் அதைவிட்டு யோக சக்தியினால் ஸ்ரீபாஷ்யத்தையே கொள்ளவேணுமெனலாம். பொருத்தமில்லை யென்பது எப்படி ? தோன்றியபடி கறடுமுறடாகச் சில சொற்களைச் சேர்த்தெழுதுவதே நூல் எழுதுவது, அவற்றைப் பாட்டாகவும் ச்லோகமாகவும் எழுதுவதே காவியமியற்றுவது என்றிருப்பவர்கள் வாக்கியங்களின் நுட்பப் பொருள்களை அறிவது மிகவரிது. அப்படியிருக்க அவர்கள் பொருத்தமில்லையென்று ஒரு பொருளை விடச் சொல்வதாலேயே கற்றோர் அப்படிச்செய்யார். ரூடிசக்தியினாலே தோற்றிய பாதஞ்ஜல பாஷ்யத்திற்கு இந்த ப்ரகரணத்தில் சேர்த்தியில்லை யென்று முதலில் ஸம்சயம் உண்டாகலாம். ஸ்ரீபாஷ்யத்தைப்பற்றி மேலே சொல்வதால் அதன் விஷயத்திலும் இங்கு ஸம்சயம் உண்டாகுமென்பதில் ஸம்சயமில்லை. இனி மஹாபாஷ்யத்தை ஒருவாறு பொருந்தவிடலாமா அல்லது புநருக்தி பரிஹாரம் பண்ணி ஸ்ரீபாஷ்யத்தையே கொள்ளலாமா என்று மீமாம்ஸை பண்ணப்ராப்தம். இப்படி ஆலோசித்துப் பார்த்தால் ஸ்ரீபாஷ்ய வரியின் முன் வரிகளில் என்ன சொல்லியிருக்கிறது, கவி ஒரு க்ரமத்தை யநுஸரித்

திருக்கிருரா என்று விமர்சிக்கத் தோன்றும். அப்பொழுது பேதாபேதம், பேச்சொன்றுக்கு, தீதாகிய, என்று முன்னுள்ள மூன்று வரிகளில் பரமதநிரஸநம் விஷயமென்பது தோன்றும். இதற்குப் பிறகு, அதற்கும் முன் ஆழ்வார் ஸ்ரீஸூக்தியை எதற்காக வெடுத்தது என்ருராயத் தோன்றும். அப்போது 'தெளியாத மறை நிலங்கள் தெளிகின்ருேமே' என்று ஸாதித்தபடி பரமதநிரஸநமும் ஸ்வமதஸ்தாபநமும் பண்ணுவதற்குரிய யோக்யதை ஆழ்வார் அநுக்ரஹத்தாலே வந்ததாகையால் அதையெடுத்ததென்பது விளங்கும். இவ்வாறு தமிழ்மறையின் உபயோகத்தைப் பராமர்சித்த உடனே அதற்கு முன்னுள்ள வரியில் அதாவது ப்ரக்ருதமான முதல் வரியில் ஸம்ஸ்க்ருத வித்யாஸ்தானங்களெல்லாம் கருதப்பட்டனவென்பதும், அவற்றில் அங்கங்களைச் சொன்னல் அங்கியான வேதம் ஸுலபமாகச் சொல்லப்பட்டதாகுமாகையாலும், அங்கங்களுக்குள் முதலாவதான வியாகரணத்தைச் சொன்னல் மற்றவைகளுக்கும் அது உபலக்ஷணமாகுமாகையாலும், வியாகரணத்திற்குள் 'உத்தரோத்தரம் முநீநாம் ப்ராமாண்ய' மென்று சொல்லுகிறபடி மஹாபாஷ்யம் மிக ப்ரதாநமாகையாலும் இதுவே நிர்த்தேசிக்கப்பட்டது என்பதும் ஸஹ்ருதயர்க்கு அத்யந்த ரஸோல்லாஸகரமாய்த் தோற்றி நிற்கும்.

ஶீக்ஷாஸாதகஂஶப்ஶாஸ்த்ராண்யவி வ ஶோதநாக ।
ஸ்வாவ விஂஶத்யெவ யஸஂ வித்யாநியிஶோஶ்ரயெ ॥

என்று வெஹவப்ரகாஶிகையிலும்

ஜ்யோதிஶ்ஶப்தஶாஸ்த்ரப்ரவீணஃ

என்று ஸப்ததிரத்நமாலிகையிலும் ஸாமாந்ய சாஸ்த்ர

பாண்டித்யமும் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நிரூபகர்க்கு ப்ராமாணிகமாயும் ரம்யமாயுமிருக்கிற இந்த அர்த்தம் ஸமாநாதிகரணமாய் ப்ரவ்ருத்திக்கின்ற ப்ரஜ்ஞா விசேஷமுடைய அந்த ஸ்வாமியினுல் சொல்லப்பட்டிருக்க இதை ஆக்ஷேபித்து "தேசிக திவ்ய சரித்திரத்தில் ஓரிடத்திலும் ஒருவராலும் ப்ரஸ்தாவிக்கப்படாததும் வக்தாவுக்கு விவக்ஷிதமல்லாததும் ஸ்வாமியின் திருவுள்ளத்திற்கு முகப்பல்லாததுமான வொருபொருளையொருவர் எழுதிவிட, அதை அழகிய சிங்கர்களும் அந்தோ ஆமோதித்தார்களே என்று மஹான்கள் வருந்தும்படியாக இடந்தருவது நலமன்றே" என்று அஸ்தாநே அழகியசிங்கர்களுக்கும் அர்ச்சனை பண்ணிக்கொண்டு வ்யதிகரணமதிகள் தமது ஸர்வலோகஹாஸ்யதையையும் அத்யந்த சோசநீயதையையும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். இனி புநருக்தி பரிஹாரத்தைப் பார்ப்போம்.

> ஒருகாலும் புநருக்தமாகாது. ஸ்ரீபாஷ்ய ப்ரதிஷ்டாபந (?) க்ரந்த விசேஷங்களை யருளிச் செய்தமை முந்தின வாக்யத்தில் விவக்ஷிதம். ஸ்ரீபாஷ்ய ப்ரவசநம் செய்தருளினமை பிந்தின வாக்யத்தில் விவக்ஷிதம். க்ரமேண ஶ்ருத்வ நவ்யாவஷ்டாவிம்ஶே ஜயயுஜவஷ்டிகா என்ற ஸ்ரீஸூக்தியையும் த்ரிம்ஶத்வாரம் ஶ்ராவிதஶாரீரகபாஷ்ய: என்ற ஸ்ரீஸூக்தியையும் யோஜித்துக்கொள்வது

என்கிறுர்கள். (1) ஸ்ரீபாஷ்யத்தைப் பற்றி இரண்டு விசேஷம் சொல்லவேணுமென்ற கருத்து கவிக்கு இருந்திருக்குமாகில் இதைப் பற்றிய இரண்டு வரிகளுக்கு நடுவில்

ஆழ்வார் ஸ்ரீஸூக்தி முதலிய வேறு விஷயங்களைப் பேசியிருப்பது சேராது. (2) பிந்திய ஸ்ரீபாஷ்ய வாக்யத்திற்கு முன்னுள்ள வாக்யத்தில் சத தூஷணியைப் பேசியிருப்பதால் அதனுலேயே ஸ்ரீபாஷ்ய ஸித்தாந்த ஸ்தாபநத்திற்காக ஏற்பட்ட ஸர்வ க்ரந்தங்களையும் விவக்ஷித்திருக்கமுடியுமாதலால் அதற்காகத் தனிவரி அபேக்ஷிதமன்று, அங்கு வாதக்ரந்தங்கள் விவக்ஷிதங்கள். இங்கு வியாக்யாந க்ரந்தங்கள் எனில் இதனுல் என்ன விசேஷம்? எதற்காக இந்தப் பிரிவு? இருப்பதற்கு அர்த்தம் சொல்லுகிறேமென்னில் கவியின் கருத்து விளங்கவில்லை யென்றதாயிற்று. ப்ரயோஜநமுள்ள அர்த்தாந்தரம் இருக்க ஏன் இந்த ஸங்கடம். வேதவேதாங்க விஜ்ஞாந பூர்த்தியுமன்றே அவச்யவக்தவ்யம். (3) உதாஹரித்த இரண்டு ஸ்ரீஸூக்திகளிலும் ப்ரவசநம் சொல்லியிருப்பதால் விசேஷமொன்றுமில்லை. ஜயத்வஜபட்டிகா என்றவித்தால் பரமதநிரஸநம் தோன்றுகிறதேயன்றி ஸ்ரீபாஷ்யத்திற்குச் சிறப்பு உண்டானதாகத் தோன்றவில்லை. ஸர்வம் ஹி ஸதஸி வித்யாவிலஸிதம் ஸித்யதி।

2) ரத்யோதகம்.

ஸ்வாயுக்திகீடவசநா-
ந்யபி ஸந்தி ஸந்தஸ் ஸம்பூஷணாநி
ரத்யோதகைரிவ ஜநா-
ஸ்ஸ்வாஹவாத: பவித்ரயதி॥

என்னைப்போன்றவர்களுடைய சொல் மிகவும் இழிவானது. ஆகிலும் அதற்கு ஆசார்யர்களுடைய

> நூலின் ஸம்பந்தம் உண்டானால் இது அதை, தெருத் தண்ணீர் கங்காப்ரவாஹத்தில் விழுந்தால் இந்த வீழ்ச்சி அந்தத்தெருத்தண்ணீரை எப்படி சுத்தமாக்குமோ அப்படி சுத்தமாக்குகின்றது

என்று வாசஸ்பதிமிச்ரர் என்பவர் சங்கரஸூத்ரபாஷ்யத்தின் வ்யாக்யானமாகிய தன் பாமதி க்ரந்தத்தின் ஆரம்பத்தில் கூறியிருக்கின்றார்.

𑌯𑌦𑍍𑌰𑌙𑍍𑌗𑌨𑌾𑌥𑌮𑌣𑌿𑌪𑌾𑌦𑍁𑌕𑌯𑍋𑌰𑍍𑌨𑌿𑌵𑍇𑌶𑌾𑌤𑍍
𑌵𑌲𑍍𑌮𑍀𑌕𑌸𑌂𑌭𑌵𑌗𑌿𑌰𑌾𑌂 𑌸𑌮𑌤𑌾𑌂 𑌮𑌮𑍋𑌕𑍍𑌤𑌿𑌃 ।
𑌗𑌙𑍍𑌗𑌾𑌪𑍍𑌰𑌵𑌾𑌹𑌪𑌤𑌿𑌤𑌸𑍍𑌯 𑌕𑌿𑌯𑌾𑌨𑌿𑌵 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍
𑌰𑌥𑍍𑌯𑍋𑌦𑌕𑌸𑍍𑌯 𑌯𑌮𑍁𑌨𑌾𑌸𑌲𑌿𑌲𑌾𑌦𑍍𑌵𑌿𑌶𑍇𑌷𑌃 ॥

> எம்பெருமானுடைய திவ்ய பாதுகைகளோடு ஸம்பந்தப்பட்டு எனது சொல் வால்மீகி முனிவரின் சொல்லோடு துல்யமாகின்றது. கங்காப்ரவாஹத்தில் விழுந்த தெருத்தண்ணீருக்கு யமுநா ஜலத்தைக்காட்டிலும் எவ்வளவு வாசி உண்டு? (வாசி ஒன்றுமில்லை)

என்று பாதுகாஸஹஸ்ரத்தில் முதலாவதான ப்ரஸ்தாவ பத்ததியில் ஸ்ரீதேசிகன் ஸாதித்திருக்கின்றார். இங்கு (ஸ்வாயபூக்ருதி) 𑌨𑌿𑌵𑍇𑌶𑌨𑌂 𑌰𑌙𑍍𑌗𑌨𑌾𑌥𑌮𑌣𑌿𑌪𑌾𑌦𑍁𑌕𑌯𑍋- 𑌰𑌥𑍍𑌯𑍋𑌦𑌕𑌂 𑌰𑌥𑍍𑌯𑍋𑌦𑌕𑌸𑍍𑌯 [𑌨𑌿𑌵𑍇𑌶𑌾𑌤𑍍
𑌗𑌙𑍍𑌗𑌾𑌪𑍍𑌰𑌵𑌾𑌹𑌪𑌾𑌤𑌃 𑌗𑌙𑍍𑌗𑌾𑌪𑍍𑌰𑌵𑌾𑌹𑌪𑌤𑌿𑌤𑌸𑍍𑌯,

என்று பல பதங்கள் ஒன்றாயிருந்து, காலத்தில் முற்பட்டவரான வாசஸ்பதியின் இந்த ச்லோகத்தைக் கருத்தில் வைத்தே தேசிகன் இந்த பாதுகாஸஹஸ்ர ச்லோகத்தை ஸாதித்திருக்கின்றார் என்பதை ஸ்பஷ்டமாக, நிஸ்ஸந்தேஹமாக,

காட்டுகின்றன. வாசஸ்பதி ச்லோகத்தில் "க்ஷாராம்புக்ஷிதி நிவேசனம் (கத்ய) ஸலில ... ஜாஹ்நவீ ... (க...) பவித்ரயதி" என்ற இவ்வளவே ப்ரக்ருதம். கவித்வ வாஸனையில்லாதவரானல் இவ்வளவே சொல்லி இந்தக்ரந்த கார் நின்றிருப்பார். அது உள்ளவராதலின் இவர் அதோடு நிற்காமல் உபமானம் ஒன்று கூறினர். ஆகையால் இங்கு உபமாலங்காரம் உள்ளது. இவ்விதமான, சிறந்த, அழகிய, அலங்காரத்தையும் இதுபோன்ற மற்றச் சிறப்புக்களையும் தோன்றச்செய்யும் புத்திவன்மையே ப்ரதிபை எனப்படுகிறது. இந்த ப்ரதிபாவிலாஸத்தை தேசிகன் கொண்டாடினர். அத்துடன் அங்கு ஒரு பரிஷ்காரத்தையும் செய்யலாமென்று காட்டினர். கங்காப்ரவாஹத்தில் வீழ்வது தெருத் தண்ணீருக்குள்ள அசுத்தியைப் போக்குகின்றது என்றார் அவர். அவ்வளவு மாத்திரமல்ல. அதை யமுநாதீர்த்தம் போலவே ஆக்குகின்றது என்கிறார் தேசிகன்.

இப்படி நாம் எழுதியிருந்தோம். இதைப் பற்றியும் விமர்சம் செய்திருக்கின்றார்கள். "தேசிகன் ச்லோகத்திற்கும் வாசஸ்பதிமிச்ரர் ச்லோகத்திற்கும் யாதொரு ஸம்பந்தமுமில்லை" என்று ப்ரதிக்ஞை செய்துவிட்டு உடனே "ரத்யோதகசப்தம் அங்குமுளது, இங்குமுளது என்று சொல்லலாம்" என்று இந்த ஒரு பதத்தைப்பற்றி ஏதோ அரைமனதாய் அநுமதி செய்திருக்கின்றனர். சொல்லாமலுமிருக்கலாம் போலும்.

ஜாஹ்நவீப்ரவாஹபதிதஸ்ய ஜாஹ்நவீப்ரவாஹபாத:

மூன்று சொற்களாலாகிய பெரிய ஸமஸ்த பதங்களான இவ்விரண்டுக்கும் ஒருவித ஸம்பந்தமுமில்லை! ஏனெனில் இப்

பொழுது செய்யவேண்டியதாக இவர்கள் ஸங்கல்பித்திருக்கும் தூஷணத்திற்கு அது விருத்தமாயிற்றே. இவர்கள் இல்லையென்றால் இல்லைதான்!

(ஆச்ரயச்ருதி) நிவேசநம் (...வாதூலகயோ:) நிவேசாஸ

இங்கு நிவேசநம் என்பதற்கும் நிவேசாஸ என்பதற்கும் முன்போலவே இவர்கள் கண்ணைமூடிக்கொண்டு விட்டபடியால் ஸம்பந்தமே கிடையாது. பெரியவாச்சான்பிள்ளை உரையில் ஸங்கோசகபதமிருக்க தேசிகன் ஸங்கோச பத ப்ரயோகம் பண்ணினது இவர் அதைக் கண்டபாடம் செய்தார் என்று காட்டும். இங்கு இத்தனை பதங்களிருந்தும் ஒரு ஸம்பந்தத்தையும் காட்டாது! ஸாத்ரம் சாவக!

பாதுகை—கங்கை
தேசிகன்வாக்கு—தெருத்தண்ணீர்
வால்மீகிவாக்கு—யமுனை

ஆசார்யக்ருதி—கங்கை
வாசஸ்பதிவாக்கு—தெருத்தண்ணீர்

இப்படி தேசிகன் ச்லோகத்தில் உபமேயத்தில் மூன்று அம்சங்களும் உபமாநத்தில் மூன்று அம்சங்களும் இருக்கின்றன. வாசஸ்பதி ச்லோகத்திலோ வெனில் இரண்டே. ஆகையால் ப்ரதிபாத்ய விஷயமாக ஸம்பந்தமொன்றுமில்லையெனில் உபமாநத்திலும் உபமேயத்திலும் இரண்டு இடங்களிலும் இரண்டு அம்சங்கள் ஒரேவிதமாக இருக்க ஸம்பந்தமில்லையென்பது ப்ரத்யக்ஷபாதிதம். மூன்றுவது அம்சம் வேறுபட்டிருக்கிறதே யென்னில் இதுதான் தேசிகன் செய்தருளும் பரிஷ்காரம் என்கிறோம். வாசஸ்பதி அஸ்மத்

பாஷ்யகாரருக்கும் முன்பட்டவர். தேசிகன் அவருடைய க்ரந்தத்தைப் பார்த்திருக்கிறார் என்பதில் ஸம்சயமில்லை. அவருடைய பதங்களே பல ப்ரயோகப்படுத்தப்பட்டிருப்பதால் இந்த ச்லோகம் எழுதும்போது அவர் ச்லோகம் தேசிகனுக்கு புத்திஸ்தமென்பதிலும் ஸம்சயமில்லை. அவர் உபமானத்திலும் உபமேயத்திலும் இரண்டு அம்சங்களையே சொல்லியிருக்க ஸ்வாமி மூன்று அம்சங்களை கடநம் பண்ணியிருப்பது பரிஷ்காராபிஸந்தியினாலே என்கிறோம் நாம்.

1 பாதுகா —	ஆசார்யக்ருதி —	கங்கா
2 தேசிகன் வாக்கு—	வாசஸ்பதிவாக்கு—	தெருத்தண்ணீர்
3 வால்மீகி வாக்கு	——	யமுநா

முதல் இரண்டுடன் தேசிகன் ச்லோகத்தை முடித்திருந்தால் இவர் வாசஸ்பதியின் சாயையை அநுஸரித்திருக்கின்றார் என்பதில் அல்பஜ்ஞர்களுக்கு ஸம்சயமுண்டாயிருக்காது. நிச்சயமே ஏற்பட்டிருக்கும். உபமேயத்தில் வால்மீகி வாக்கையும் உபமானத்தில் யமுநா தீர்த்தத்தையும் சேர்த்திருப்பதைப் பார்த்து இது அத்யந்த விலக்ஷணமென்று ப்ரமிக்கின்றார்கள். இதற்கு மூலம் "முகுந்தமணிபாதுகையில் வான்மீகி வாக்கும் ப்ரஸரித்தது, என் வாக்கும் ப்ரஸரித்தது என்று ஸ்வாமி பணிக்குமிடம்" என்று பேசுவித்த மற்றொரு ப்ரமம். வால்மீகி விஷயம் முன் இரண்டு ச்லோகங்களில் சொல்லியாகிவிட்டது. இவ்விடத்தில் தம் வாக்கின் விசேஷத்தை ப்ரதிபாதிக்கவே கவி இப்படியருளிச் செய்கிறார். அது 'ஶ்ரு நாமீஶாகாஶம் ஸவதா ஸாரவிம்யா ஸ்புரவதீ தஜேஷா கிம்ஸ்ரு தா ஸதா ஸவஷி ஸஞாவஶ ஹிதஃ' என்றதுபோல இரண்டு அம்சங்களாலேயே ஸாகர

மாயிருந்தும் உபமேயத்தில் வால்மீகிவாக்கு ஸாம்யத்தையும் உபமாநத்தில் யமுநாதீர்த்த ஸாம்யத்தையும் சேர்த்தது வாசஸ்பதி ச்லோகத்திற்குமேல் ஒரு பரிஷ்காரம் செய்வதற்காகவேயென்று ஸஹ்ருதயஸூகமம்.

> [illegible]
> [illegible] ।
> [illegible]
> [illegible] ॥

என்றிப்படியிருந்தால் வாசஸ்பதி ச்லோகச்சாயை இருப்பது இவர்களுக்குப் புலனாயிருக்கும். வால்மீகி வாக்கின் ஸாம்யத்தை ப்ரதிபாதிப்பதனால் வால்மீகி வாக்கின் ஸம்பந்தமும் இங்கு விவக்ஷிதமென்று ப்ரமித்து விமர்சம் வேறு செய்ய ஆரம்பித்துவிட்டார்கள்.

“புஷ்பமாலாநுஷங்கேண ஸூத்ரம் சிரஸி தார்யதே’ இத்யாதிவத் சொன்னதில் விஸ்மயநீயமொன்றுமில்லை” எனப்படுகிறது. ஸம்பந்தமுள்ளவிடத்தில் அது இல்லை என்று அத்புதமாக ஸ்தாபித்துவிட்டுப் பிறகு தம்முடைய லோகோத்தர ப்ரஜ்ஞாவிலாஸத்தை ஸர்வலோகவிதிதமாகச் செய்வதற்காக ஸம்பந்தம் ஸர்வதா இல்லாதவிடத்தில் இருப்பதாக ஸாதிக்கின்றனர். கங்கா தீர்த்தத்தில் விழுந்து வீதிஜலம் தன் அசுத்தியைக் கழித்து பவித்ரதையை அடைகின்றது. கங்கா தீர்த்தத்தோடு கலந்து ஒன்றுப்போன அத்தெருத்தண்ணீர் தன் ஸ்வரூபத்திற்கே ஓர் ஏற்றம் பெறுகிறது. இவ்விதச் சிறப்பு பூமாலை கட்ட உபயோகப்படுத்தப்பட்ட நாருக்கு இல்லை. நார் நாராகவே இருக்கின்றது. புஷ்பத்தோடு இதுவும் சிரஸ்ஸில் தரிக்கப்படுகின்றது என்ற இவ்வளவே இந்த வாக்யத்தில் விவக்ஷிக்

கப்படுகிறது. ஆகவே தன் ஸ்வரூபம் மற்றென்றின் ஸ்வரூபத்தோடு அபேதப்ரதிபத்தி வரும்படி மிச்ரமாய் சிறப்புப் பெறுகிறது என்னும் வாசஸ்பதி ச்லோகத்திற்கும் குணமுள்ளதின் சேர்க்கையினுல் குணரஹிதத்திற்கும் மற்றவர்களுடைய பரிக்ரஹம் உண்டாகிறதென்கிற புஷ்பமாலா ச்லோகத்திற்கும் ஸம்பந்தம் சொல்வது கேவலம் ஈஹிஜு ோ நிகுவிஜ்ரும்ஹிதாஞ்ஃ.

யொ தெஷொ நிமொஷதெலிகணொ
யஸ்ராவஸ்ய வாஜாவெ
கூருகூா ஸக்தினா த்தொயிமத
வூஜூாயதெ ஸஜ்ஜதெ ।
ஸவஹும் தம் வ்யவயஷிய ஸளூவனிதம்
ஹ்ருஷெஹ்ய த ஜநொஷாபம்
ஹஷியஷெஸ்வூ ஹவிதாஃஃவத ஸஷக்திஷா ரவஸா
ஷூாஃஷூஷொஃ வ்யயாஃ ॥

ஸவஹுதம் த்ருஷதம் த்ருஞ்வெராயிவூஷ வெதஸாழு।
ஷூிரா ஸவெஹுஷா தம்த்ருஷா ஷூிதா வ்யாதிவத
ஸிகூதா ॥

இங்கு விதவெயெதிஹ்யஸஹஸுவணஹுந ஸம்ப்ரதாயத்திற்கு அநுரூபமாயும் ஸ்வதோஷத்தைப் பிறரிடத்தில் ஆரோபணம் செய்யத்தூண்டுகிற தன் ப்ரக்ருதிக்குத் தக்க தாயுமுள்ள ஒரு கல்பநா கதையை எழுதியிருக்கின்றார்கள். 'புஷ்பமாலாநுஷங்கேண' என்ற ச்லோகத்திற்கும் வாசஸ்பதிமிச்ரர் ச்லோகத்திற்கும் ஸம்பந்தம் சொல்லுகிறவர்கள் அவச்யம் இப்படி நிதர்சநம் கல்பித்துக் காட்ட வேண்டியதே.

'தேசிக ஸம்ப்ரதாயத்திற்கே பொருந்தியது ஈடு' என்ற நிரவத்யமான வாக்யவிந்யாஸத்தைத் தூஷிக்கப் புறப்பட்டு, காலபௌர்வாபர்யத்தை யநுஸரித்து இதை மாற்றிச் சொல்லவேண்டுமென்று திருத்தம் செய்து, இதற்குக் கொஞ்சமும் அநுகுணமாயிராத கர்த்ரு கர்ம வ்யத்யாஸ முள்ள வாக்யத்தை த்ருஷ்டாந்தமாகக் கொடுக்குமவர்கள் வாக்யங்களின் ஸம்பந்தாஸம்பந்தங்களைப் பற்றிப் பேச எவ்வளவு யோக்யதை பெற்றவர்களென்று உலகம் தெரிந்து கொள்ளாமல் இராது. இன்னும் கேண்மின்.

பிராட்டியைச் சிறைப்படுத்திப் பலவிதங்களிலும் முயன்று அவளைத் தன் வசமாக்க முடியாமல் வருத்தப் பட்டுக்கொண்டிருந்த ராவணன், ராமவேஷம் தரித்து அணுகி அவளை அநுகூலையாக்கிக் கொள்ளலாமென்று சொன்ன ஒருவருக்கு, ராமவேஷம் தரித்தால் பரபார்யை யைக் கண்ணாலும் பார்க்கக்கூடாதென்ற தர்ம புத்தியே உண்டாவதால் அது தகுந்த உபாயமன்றென்று மறுமொழி கூறியதாக கதாரஸிகர்கள் கூறுவது கேட்டிருக்கின்றோம். அவ்விதமாக நம்மைப் பரிஹஸிப்பதற்காக இவர்கள் கட்டின கதையும் தேசிக. திவ்ய கடாக்ஷோபஜீவிகளான நம்மை புத்தியில் வைத்துக்கொண்டே கட்டினதொன்றாகையால் மிகவும் ஸமஞ்ஜஸமாகவே அமைந்திருக்கின்றது.

[illegible] ।

யதாச்ருதமாய் எல்லோரும் சொல்லும் பொருள் ஒன்று இருக்கச் செய்தேயும் மஹாகவிகளின் வாக்கில் அவர்கள் கருதாவிடினும் அதி கம்பீரமான வேறு பொருளும் வந்து

கிடக்கும். அது இவர்கள் காட்டிய ரீதியிலேயே இந்த யதிராஜஸப்ததி ஸூக்தியில் அமைந்திருக்கின்றது.

கழ। கஂ ஸுஹ வஂ ஸுஹ என்று உபநிஷத்துச்சொல் லுகிறபடி நிரதிசயாநந்தமயனானவன்.

கவி। இது விரோதம் ஸமுச்சயம் ஆக இரண்டு பொருளிலும் வரும். கவி வெகஸ வஸுஷுாாவாரா: என்ற கீதாச்லோகத்தில் விரோதப் பொருளில் வந்திருக்கின்றது. இவ்வர்த்தத்தில் இந்த 'அபி' சப்தத்தைக் கொண்டால் ப்ரஹ்மஸ்வரூபனாயிருந்தும் குருவாயிருக்கின்ற ஒருவனை வந்திக்கிறேனென்று வாக்யப்பொருளாம். ஸர்வேச்வர னுக்கு அந்த ஆகாரமிருப்பதுபற்றி குருத்வமிராது என்று சங்கிப்பர். அந்த சங்கையைக் கீழிப்பதற்காக கவி ஶுாரஂ என்றது. ஸமுச்சயப் பொருளில் கொண்டால் 'கஂ பரப்ரஹ்ம ஸ்வரூபனாயிருந்துவைத்தே ஶுாருவி ஆசார் யனாயுமிருக்கின்றவனை' என்றதாகும். 'கயவா கஜொzவி வஸு' என்றது போலே கவி வஷஂ ஶுாருழ என்னலாம். "உபநிஷத்து எங்கே! கீதை எங்கே! எவையெவை எப்படி ஓடிவருகின்றன பாருங்கள்" என்று பேசச் சிறிதும் இட மில்லை. 'கஹஂ வாரொஹாவவிவாஷஹாஜ: கிஂ காவபுதெ தவஸு மிரொா யயாஹஙுழ।'

ஞாஷுழ। ஸர்வ கர்மாக்களுக்கும் ப்ரதமமும் ப்ரதாநமு மான அங்கம் ஸங்கல்பம். அதில் ஞாஷு ஸுஹண: என் கிறோம். அங்கு 'ஆத்ய' என்பதற்கு ஸ்ருஷ்டிக்கப்பட்டவர்

களில் ஆத்யன் முதலானவன் என்று பொருள். அவனுக்கும் வேதோபதேசம் பண்ணினவனுனபடியாலே அப்படி ஸங்கோசம் வேண்டாதபடி ஸர்வர்க்கும் ஆத்யன் என்றபடி.

ഗുരു: । இதற்குப் பல படியாகப் பொருள் கூறுவர். நம்முடைய அஜ்ஞானத்தைப் போக்குகிறவர் என்பது ஒரு பொருள். இது நிருக்தியினுல் கிடைக்கின்றது. ரூடியினுலும் ஆசார்யன் உபதேஷ்டா என்ற பொருள் கிடைக்கும். உலகத்தில் கனமான பொருளெல்லாம் குரு எனப்படும். வித்யையினுலும் குணத்தாலும் சீலத்தாலும் கனத்திருப்பவர்கள் குருக்களாகின்றனர். இதற்கு எதிர்மறை லகு என்பது. முற்கூறிய குணங்களில்லாதவர்கள் லகு எனப்படுவார்கள். பெருங்காற்றிலும் அசையாத கல் குரு. மூச்சுக் காற்றினுல் பறந்தோடும் பஞ்சு லகு. காமக்ரோதாதிகளினுல் தன்னிலை இழந்து பிறரை வைது திட்டி பொய்சொல்லி த்ரோஹம் செய்து வஞ்சனையே வ்ருத்தியாக நிற்குமவர்களெல்லாம் லகுக்கள்.

ஒலிகளில் சில நீண்டும் சில குறுகியுமிருக்கும். இவற்றை முறையே குரு என்றும் லகு என்றும் பாணிநி வ்யவஹரிக்கின்றுர். குறுகிய வர்ணமும் மேல் ஸம்யுக்தாக்ஷரம் வந்தால் குருவேயாகுமென்றுர் அவர். ஹ்ஸ்வம் லகு ; ஸம்யோகே குரு ; தீர்க்கம் ச ; என்றவை அவருடைய ஸூத்ரங்கள். தான் லகுவான ஒன்றுயினும் தகுதியுள்ள மற்றெருன்றேடு சேர்ந்தால் தனது லகுத்தன்மையை நீக்கி குருத்வம் பெறலாமென்றதாயிற்று. இப்படியே சிறிய மூட மனிதரும் தகுந்தவர்களோடு சேர்ந்து பழகினுல் பெருமை பெறலாம். இல்லையேல் லகுத்வம் அப்படியே இருக்கும்.

तद्य इह मनुष्याणां महत्तां प्राप्नुवन्ति ध्यानापादांशा इवैव ते भवन्ति । अथ येऽल्पाः कलहिनः पिशुना उपवादिनस्ते । अथ ये प्रभवो ध्यानापादांशा इवैव ते भवन्ति ।

என்ற சாந்தோக்ய வாக்யங்களில் சொன்ன அல்பத்வமும் மஹத்த்வமும் லகுத்வ குருத்வங்களே. இவ்விதமாகப் பல வகைப்பட்ட பெருமையுடையவர் குருவெனப்படுவர்.

कविमातृगुरुविभवेन । முதல் பாதாரம்பத்திலுள்ள 'கவி' என்பது இங்கு மறுபடியும் ப்ரயோகிக்கப்பட்டிருப்ப தால் சப்தாலங்காரம் உண்டு. पक्षमातृगुरुविभवेन என் ருல் அது போய்விடும். இது ஸ்வாமி காவ்யங்களில் ஸ்வ யமே அமையுமலங்காரம்.

இப்படி இங்கு ஸர்வம் ஸமஞ்ஜஸமாம். நம்முடைய ஸ்மரணமின்றி ஸ்வாத்மமாத்ராநுஸந்தாநத்தாலே படிக் கப்பட்ட புஷ்பமாலா ச்லோகத்திற்கு வாசஸ்பதி ச்லோக ஸம்பந்தம் அகடிதகடநா ஸாமர்த்த்யசாலி ஸர்ஹாய்யம் பெற்றும் கல்பிக்கவியலாது.

மூன்றும் தடவையாக ப்ரதிஜ்ஞை செய்கிரும்.

परीवादः शक्त्या भवतु परिहासः प्रसरतु
क्रियोद्योगं सत्स्वैत्यैहि कथमपि क्षुब्धमनसः ।
भविष्यामो नामी वयमिह तु निष्ठापृजवदे
सज्जनः श्लाघ्यामोऽनुजनदमनयातीयत्ययिमः ॥

𑌉𑌤𑍍𑌸𑌾𑌹𑌂 𑌵𑌿𑌹𑌿𑌤𑍋𑌦𑍍𑌯𑍋𑌗𑌸𑍍𑌯𑍈𑌷 𑌵𑌿𑌵𑌾𑌹𑌾𑌂

𑌪𑍍𑌰𑌜𑌾𑌂 𑌨𑌿𑌷𑌿𑌦𑍍𑌧𑌕𑍍𑌰𑌿𑌯𑌾-

𑌸𑍍𑌵𑌾𑌸𑌕𑍍𑌤𑌿𑌂 𑌪𑌰𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌵𑌤𑍍𑌯𑌪𑌿 𑌪𑌰𑌾𑌂

𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌂 𑌸𑌾𑌮𑍍𑌰𑌾𑌜𑍍𑌯𑌯𑍋𑌗𑍇 ।

𑌨𑌿𑌸𑍍𑌸𑌙𑍍𑌗𑌤𑍍𑌵𑌸𑍍𑌥𑌿𑌰𑌾𑌪𑌿 𑌪𑌤𑌿𑌤𑍇

𑌤𑍍𑌵𑌯𑌿 𑌪𑍍𑌰𑌾𑌹𑌾𑌰𑍋𑌷𑌿𑌯𑌾

𑌤𑌸𑍍𑌯𑍈 𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌜𑍁𑌷𑍇

𑌨𑌿𑌰𑍍𑌵𑍍𑌯𑌾𑌜𑌤𑌾𑌯𑍈 𑌨𑌮𑌃 ॥

𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌾𑌰𑍍𑌥𑍍𑌯 𑌕𑌾𑌵𑍍𑌯𑌾𑌪𑌿 𑌸𑌕𑌲𑌮𑌹𑌿𑌤𑍋

𑌦𑌣𑍍𑌡𑌂 𑌵𑌾𑌕𑍍𑌪𑍂𑌰𑍍𑌣𑌂

𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌯𑌾 𑌵𑍍𑌯𑌾𑌸𑍍𑌯. 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌮𑌹𑌤𑌾𑌂

𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌨𑍁 𑌨𑌿𑌵𑌯𑍍𑌯 ।

𑌦𑌤𑍍𑌤𑌂 𑌯𑌸𑍍𑌯𑌾𑌃 𑌪𑍍𑌰𑌸𑌤𑍍𑌤𑍍𑌯𑌾𑌽𑌖𑌿𑌲𑌵𑌿𑌦𑌾𑌨𑌨𑌕𑍋

𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍀𑌯𑌂 𑌸𑌜𑍍𑌜𑌨𑍇

𑌤𑌸𑍍𑌯𑍈 𑌨𑌿𑌯𑌤𑍍𑌯𑍈𑌣𑌾𑌯𑍈 𑌨𑌮𑍋 𑌨𑌮𑍋 𑌨𑌮-

𑌸𑍍𑌤𑍁 𑌨𑌿𑌰𑍍𑌵𑍍𑌯𑌾𑌜𑌤𑌾𑌯𑍈 ॥

5. விமர்சம்

மனுஷ்யர்களுக்கு ப்ரம ப்ரமாதங்கள் **ஸஹஜ** தோஷங்கள். ஸுவ்யுத்பந்நர்களுக்கும் லக்ஷண க்ரந்தங்களை அத்யாபநம் பண்ணுவதே ப்ரதான வ்யாபாரமாய் இருக்குமவர்களுக்கும் தாம் எழுதும்போது ஸ்காலித்யமுண்டாகின்றது அநுபவஸித்தம். இன்னும் அச்சுப் போடும்போது உண்டாகிற தவறுகளின் ஸ்வரூபத்தையும் வைசித்ர்யத்தையும் வாசா சொல்லி முடியாது. அபேக்ஷித காலமும் ஹாஸ்ய ரஸாபிவ்யஞ்ஜந பாடவமுமுள்ளவர்களாயிருந்தால் ஆயிரம் பக்கங்கள் கொண்ட ஒரு நூலை இது விஷயமாக எழுதலாம். விஷயம் இப்படியிருக்க பெருந்தன்மையுள்ளவர்கள் பிறருடைய க்ரந்தங்களைப் பராமர்சிக்கும்போது இவ்விதக் குறைகளில் சிறிதும் கண்செலுத்தாமல் இருப்பது அழகு. தாம் ஏதோ ப்ரம ப்ரமாதங்களில்லாதபடி வரம் வாங்கினவர்கள் போல் பிறர் எழுதுவதில் இவ்வல்பக் குற்றங்களை ஆடம்பரமாக எடுத்துக்காட்டுவது அறியாமையேயாகும். இதைப் பல தடவைகளில் எடுத்துக் காட்டியிருக்கிறோம். ஆகிலும் அது செய்கின்றார்கள். ஸ்வபாவோ துரதிக்ரம: ।

மறுபடியும் ப்ரதிபோதந முறையில் இவர்கள் இப்பொழுது எழுதி வெளியிட்டிருக்கும் தூஷண நூலில் உள்ள சப்தார்த்த தோஷங்களில் சிலவற்றை எடுத்துக் காட்டுகின்றோம்.

1) இரண்டாம் பக்கத்தில் 'எழுதுவதில் நூதன பரிசயம் செய்யும்போது **சிரபரிசிதர்களை** துணைகொள்வது நலம்' என்றிருக்கிறது. 'சிரபரிசயமுள்ளவர்களை' அல்லது

'சிரபரிசயவான்களை' என்றிருக்கவேணும். கர்த்தரிக்கும், கர்மணிக்கும் பேதம் தெரியாமல் எழுதியது இது.

2) "அடியேன் இப்போது எழுத ஆரம்பித்த விஷயம் இந்த சிக்ஷணம் பற்றியன்று" என்றவிதில் பல குற்றங்கள் உள்ளன. 'பற்றியதன்று' என்றிருக்கவேணும். அது வேருகயிருப்பது ஒரு குற்றம். இரண்டாவது; 'பற்றி' என்பதே இங்கு அநந்விதம். 'எழுத ஆரம்பித்த விஷயம் சிக்ஷணமன்று' என்றே யிருக்கவேண்டும். விஷயத்திற்கு விஷயாபேக்ஷையில்லையாதலின் 'ஆரம்பித்த விஷயம் சிக்ஷணவிஷயகமன்று' என்பது அஸங்கதமென்பது ஸ்பஷ்டம். மூன்ருவது; எழுதுவதே சிக்ஷணமா எழுதப்படும் விஷயம் சிக்ஷணமா என்பது ஆலோசிக்கப்படவேண்டும். சிக்ஷணம் இவ்விதமாயிருக்கவேண்டுமென்று எழுதும் ப்ரஸ்தாவம் இங்கு இலது. நான்காவது; "அடியேன் இப்போது எழுத ஆரம்பித்தது இந்த சிக்ஷணத்திற்காகவன்று" என்பதே இங்கு கருதப்பட்டதாதலின் வாக்யம் ஸர்வதா அதற்குச் சிறிதும் பொருந்தாமலே விழுந்திருக்கின்றது. இவ்வளவு அஸமஞ்ஜஸமாக ஒரு வாக்யம் எங்குமிராது.

3) ஆருவது பக்கத்தில் "இடையிடையே சில ஸ்வாமிகள் … … … என்று கொண்டு மடத்தில் ஈடுகாலக்ஷேபமும் நடந்து வருவதாக அபிநயங்கள் நிகழ்ந்தன" என்றுள்ளது. இதில் 'சில ஸ்வாமிகள் … … … என்றுகொண்டு' என்பது அந்வயிக்காமலே நிற்கிறது.

4) எட்டாம் பக்கத்தில் "இதற்கு நாலைந்து இடங்களை யாவது காட்டினல்தானே மத்யஸ்தர்கள் திருப்தியடைய நேரும். அப்படியே காட்டுகிருேம்." என்று ப்ரதிஜ்ஞை

செய்து மூன்றுவிடங்களையே காட்டி அர்த்தவிசேஷ ப்ரகரணம் முடிக்கப்பெற்றிருக்கிறது. முதலில் நாலைந்து என்று சொன்னது, மேல் எழுதும்போது மறந்துபோயிற்று. இது அஸமர்த்தலேககர்களுக்குள்ள அவலக்ஷணங்களில் முக்கியமானது.

5) "இப்பதிகத்திற்கு ஆர்ஜவகுண ப்ரதிபாதநமே ப்ரமேயமென்னுமிடத்தை" ; "ஸர்வேச்வரத்வத்தின் உபபாதநம் ப்ரமேயம்" என்று ப்ரதிபாதநமும் உபபாதநமும் ப்ரமேயமெனப்பட்டிருக்கின்றன. இவை சப்தத்தினுடையவோ புருஷனுடையவோ வ்யாபாரங்களேயன்றி ப்ரமேயங்களாகமாட்டா. ஆர்ஜவகுணமும் ஸர்வேச்வரத்வமுமே ப்ரமேயங்களெனத் தகுவன. சாஸ்த்ர வாஸநை அடியோடு இராமை ஸூத்ராவராயுக்தி [?] ।

6) இப்பக்கத்திலும் ஒன்பதாவதிலும் 'என்று ஆறுயிரப்படியில் பிள்ளான் அருளிச்செய்திருப்பது (செய்தது)' என்று வாக்ய விந்யாஸம் காணப்படுகிறது. 'என்பது பிள்ளானருளிச்செய்தது' என்றுவது 'என்று பிள்ளானருளிச்செய்தது ப்ரஸித்தம்' என்றுவது இருக்கவேண்டும்.

7) ஒன்பதாவது பக்கத்தில் '...... இருக்கின்ற அர்த்தவிசேஷங்கள் தேசிக ஸ்ரீஸூக்தியில் காணப்படுவதை இன்னமும் பல காண்க, என்றிருக்குமிது "இன்னமும் பல காணப்படுவதைக் காண்க" என்று திருத்தி எழுதப்படவேண்டும். 'காணப்படுவதைக் காண்க' என்றதும் எழுதப் பழகினவர்களின் பேச்சல்ல.

8) பதினொன்காவது பக்கத்தில் 'தத்தராவ்ருத்திகேவ ஸதி தத்ஜகவ்ருத்திகம்' [?] என்றிருப்பது அயுக்தம். இரண்டாவது

தளம் [illegible] என்றிவ்வளவே இருக்கவேண்டும். [illegible] என்ற விடத்தில் [illegible] என்று ஒருவரும் சொல்வதில்லை. அபரிசிதமான பரிஷ்காரமார்க்கத்தில் சாபலம் எதற்கு?

9) பதினைந்தாவது பக்கத்தில் "ஒரு அத்புதமான ஸூக்தி கேண்மின் ... ... என்று" என்றவிதில் 'என்று கேண்மின்' என்பது அநந்விதம். 'என்பது அது' எனத் தனிவாக்கியமாய் எழுதப்பட்டிருக்கவேண்டும்.

10) வாழி திருநாமத்தை எட்டு வரிகளாக எல்லாப் புஸ்தகங்களிலும் அச்சிட்டிருக்கிறார்கள். அங்கு யாப்பிலக்கணம் கற்காதவர்கள் வரியை அடியாக ப்ரமித்தது ஆச்சர்யமன்று. ஆனால் ஆழ்வார் முதல் அத்யதநவித்வான்கள் வரையில் எல்லோரையும் இகழ்ந்துகொண்டு ஏக ஸர்வஜ்ஞராகவிருக்க விரும்புமவர்கள் 'முதல் வாக்யத்திற்கு என்ன அர்த்தம்', 'அடுத்த வாக்யம்' என்றிப்படி ஒவ்வொரு வரியிலும் வாக்யத்வ வ்யவஹாரம் பண்ணுவது அத்யாச்சர்யம். ஒவ்வொரு வரியும் ஒவ்வொரு வாக்யமா? கர்த்தா எது, க்ரியை எது? கொஞ்சம் உபபாதித்துக்காட்டவேண்டும். முடியுமா? இப்படி எழுத சிரபரிசயம் பண்ணினவர்களின் துணையை நாடாது வ்யுத்பந்நர்கள் தாமாகவே எழுதிப் பழக்கம் பெறுவது எவ்வளவோ மேல்.

ப்ரதிபோதநத்திற்காகவே இன்னும் சொல்லுகிறோம்.

11) வாசஸ்பதிமிச்ரரின் ச்லோகத்திலுள்ள உபமையைப்பற்றிப் பேசும்போது 'இது ஒரு அழகான ப்ரதிபா

விலாஸம்' என்றேம். அந்தப் பழித்து இவர்கள்

> "புஷ்பமாலாநுஷங்கேண ஸூத்ரம் சிரஸி தார்யதே, இத்யாதிவத் சொன்னதில் விஸ்மயநீயமொன்றுமில்லை"

என்கிருர்கள். நாம் 'ரமணீயமான (அழகான)' என்ருல் இவர்கள் 'விஸ்மயநீயமன்று' என்றது ஏன்? இரு சொல்லுக்கும் ஒரே பொருளென்று கருத்தாகில் அது தவறென்பதை நாம் கூறவேண்டியதில்லை.

> 'நெய்க்குடத்தைப்பற்றி யேறுமெறும்புகள்போல் நிரந்து'
> 'நீலவரையிரண்டு பிறைகவ்வி நிமிர்ந்த தொப்ப'

என்றவிடங்களில் '[illegible] இத்யாதிவத் சொன்னவிதில் ஒன்றும் விசேஷமில்லை' யென்பர்கள் போலும். ஆழ்வார் ஸ்ரீ ஸூக்தி என்றதற்காக ஸங்கேதமாத்ர சரணர்களாய் அதைப்பற்றி இவர்கள் இழிவாகப் பேசுவதில்லையே தவிர உண்மையாக அதில் உள்ள ரஸமோ அர்த்த காம்பீர்யமோ ஒன்றும் இவர்களுக்குத் தெரியாது. இதைப் பல தடவைகளில் எடுத்துக்காட்டியிருக்கிறேம். ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளில் பல குற்றங்களிருக்கின்றனவென்றும் இவர்கள் எடுத்துக்காட்டியிருக்கின்ருர்கள்.

12) ஐந்தாம் பக்கத்தில்

> 'இந்த க்ரந்தம்—இதிலுள்ள சொற்கள்—வியாகரணத்திற்குப் பொருந்தியிருக்கிறது' என்று ஒருவர் கூறினல் 'வியாகரணத்தை நன்கறிந்த பண்டிதரால் வியாகரண மரியாதைக்குச் சேர இந்தக்ரந்தம் எழுதப்பட்டது என்றதாகவே பொருள் தேறும்'


எனப்பட்டிருக்கிறது. வியாகரணபரிசயம் சிறிதுமில்லாமல் காவ்யங்களையே கற்று லக்ஷ்யஜ்ஞரான ஒருவர் செய்த நூலில் அபசப்தமேயில்லாதிருப்பதைக்கண்டு 'இது வ்யாகரணத்திற்குப் பொருந்தியிருக்கிறது' என்றால் என்ன தேறுமோ அதுதான் மற்றவிடத்திலும் தேறும். வ்யாகரணம் தெரியுமா தெரியாதா, படித்தாரா படிக்கவில்லையா, வென்பது வேறுவிதமாக நிச்சயிக்கப்படவேண்டுமேயன்றி இந்த வாக்யத்திற்கும் அதற்கும் ஸம்பந்தமொன்றுமில்லை.

13) ஐந்தாம் பக்கத்திலேயே "ஆனால் ஒருவிதமாகக் கருத்துக் கூறலாம்" என்றாரம்பித்து "உண்மையில் இவ்விதமான அபிப்ராயத்தையே கொண்டு இவர் இஃதெழுதியிருக்கிறாரென்னத் தட்டில்லை" என்று வக்தாவுக்கு விவக்ஷிதமான வாஸ்தவார்த்தம் காட்டப்படுகிறது. இது தெரிந்திருக்க, அவிவக்ஷிதமான அர்த்தங்களையெல்லாம் ஆடம்பரமாக எடுத்து அஸங்கத விஸ்தரமெல்லாம் எதற்காகச் செய்யப்பட்டிருக்கிறது? ச்வேதபத்ரகார்ஷ்ண்யமேயன்றி ஸ்வாத்மகார்ஷ்ண்யமும் ஸம்பந்நமாவது தவிர வேறு என்ன பயன்?

14) இப்படி இங்கே வாஸ்தவார்த்தத்தைச் சொல்லி மறுபடியும் (8-ம் பக்கத்தில்) "நாம் திருத்திக்காட்டியுள்ள வாக்கியத்திற்கு என்ன அர்த்தமோ அந்த அர்த்தத்தைக் கருதியே தாம் அவ்விதம் எழுதியிருப்பதாகவும் எழுதுகிற பழக்கமின்மையால் மாறிவிட்டதாகவும் உபதேசகாரர் சொல்லித்தீரவேண்டும்" என்று முற்றிலும் மாறுபட்ட ஒரு பொருளைக் கூறுகின்றனர். "தேசிகன் ஸம்ப்ரதாயத்திற்குப் பொருந்தியது ஈடு, பிள்ளைலோகாசார்யர் ஸம்ப்ரதாயத்திற்

கன்று" என்பது முன் கூறிய பொருள். "நம்பிள்ளை ஸ்ரீஸூக்திகளை மிகவும் தழுவியிருக்கிற தேசிக திவ்ய ஸூக்திகள்" என்பது மேல் திருத்திக்காட்டிய வாக்யம். இதற்கு 'நம்பிள்ளை ஸ்ரீஸூக்திகளைத் தழுவியேயிருக்கின்றன. அவற்றைத் தழுவாமல் வேறுபட்டிருக்கவில்லை' என்பது பொருள். இப்படி முன்னும் பின்னும் முரண்படும்பொருள்களைக் கூறுபவர்களின் எழுதுந்திறமை எவ்விதமென்று யாவரும் எளிதிலறிவர்.

15) "சிறொன்று தூப்புல் திருவேங்கடமுடையான் என்ற தனியனைப் பிள்ளைலோகாசாரியரருளிச் செய்தாரென்று இக்காலத்தவர்கள் எழுதிவைத்திருப்பதைப் பலர் ஆக்ஷேபிப்பதுண்டு. அடியேன் ஆக்ஷேபிப்பதில்லை" என்று ஸமீக்ஷா ஐந்தாம் பக்கத்தில் எழுதியிருக்கின்றனர். "இக்காலத்தவர் எழுதிவைத்திருப்பதை" என்றது ஆக்ஷேபமல்லவா? எழுதுவதில் தேர்ச்சிபெற்றவர்களாயின் "இந்த மூடனை மற்றவர்கள் நிந்திப்பார்கள், நான் நிந்திப்பதில்லை" என்றவிதுபோல் இவர்களுடைய இந்த வாக்கியம் பரிஹாஸ்யமென்றதை உணர்ந்திருப்பார்கள்.



———

6. ப்ரதிப்ரச்னம்.

சிறிதும் ஸந்தேஹமில்லாது ஸ்பஷ்டமாய் விவக்ஷித வர்த்தங்களை போதிக்கின்ற வாக்யங்களையும் ச்லோகங் களையும் எடுத்துக்கொண்டு அறியாமையாலும் வஞ்சனையி னாலும் ஏதேதோ பொருள்களையும் கருத்துக்களையும் கூறி க்ரந்தங்களையும் ஸ்வாத்மாவையும் பாழ்படுத்திக்கொண்டு 'க்ஷமெஹநவா' என்றபடி காலங் கழிக்குமிவர்கள் வாஸ்தவ மாய் பொருள் தெரிந்துகொள்ளவேண்டிய ஸ்தலங்கள் பல பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளில் இருப்பதால் அவற்றில் பரிச் ரமப்பட்டு புத்தி வைசத்யமடைதற்கேற்ற விசாரத்தைப் பண்ணி ஸபலமான காலக்ஷேபத்தைச் செய்வது நலமென்று கருதி சில விஷயங்களை உபக்ஷேபம் பண்ணுகிறோம். கோப தாபங்ளிராதபடி அழகான முறையில் விசாரத்தை நடத்து வார்களாக.

1) உயர்வற. வாக்யைகவாக்யதை என்றால் என்ன? இங்கு அது எப்படி உபபாதிக்கப்படுகின்றது. இதில் இரண்டாம் அடியிலும் மூன்றும் அடியிலும் ஆவ்ருத்தி தோஷமும், முதல் இரண்டு அடிகளில் உள்ள 'அவன்' என் பது ப்ரதமாந்தமாகவும் மூன்றும் அடியிலுள்ள அது வ்ஷ்ட்யந்தமாகவும் கொள்ளப்படுவதால் வைரூப்ய தோஷ மும் வருகிறது. இக்குற்றங்களோடு இந்த யோஜனையை அங்கீகரிக்கவேண்டிய நிர்ப்பந்தமென்ன?

2) ஒன்பதினாயிரத்தில் 'என்று வாக்ய பேதம் பண்ணி யோஜிப்பர்' என்றதினால் ஏகவாக்யதாபக்ஷம் அவருக்கு அபிமதம் என்று தோன்றுகிறது. அது எது?

3) "யவனவன்' என்று யச்சப்தார்த்தமாய்" இத்யாதியால் பன்னீராயிரத்தில் சொன்ன ஏகவாக்யதை நஞ்சீயருக்கு அபிமதமானதாய் இருக்கக்கூடுமா ?

4) "யஶா ஸௌஸலவவநஃ என்கிற ப்ரமாணப்ரஸித்தியைப்பற்ற யவன் என்கிறார்" என்பது ஈட்டில் உள்ளது. இந்த ச்ருதிவாக்யம் ஜீவபரமாகையால் இது சேராதேயென்னில் ப்ரகாரவாசி சப்தம் ப்ரகாரி பர்யந்தம் போதிக்குமாகையால் பரமாத்மபரமாகக்கொள்வது என்றிங்கு அரும்பதகாரர் சங்காபரிஹாரம் பண்ணியுள்ளார். ஆனால் இது குணநிரபேக்ஷ ஸ்வரூப ப்ரஸித்தி பக்ஷத்திற்கு மாத்ரமே அநுகுணம். அஃதன்றி "குணவிசிஷ்டமான ஸ்வரூபவைலக்ஷண்யத்தைச் சொல்லுதல்" என்றதற்கும் இரண்டாம் பாட்டு விவரணத்தில் "யஶா ஸௌஸலவவநஃ என்கிறபடியே நிரதிசயாநந்தமாயிருக்கும்" என்றதற்கும் சேராது. இந்த ப்ரமாணம் மற்ற வ்யாக்யாநங்களில் உதாஹரிக்கப்படவில்லை.

5) 'இதுக்கு ஆளவந்தார் ஸ்வாபாவிகாநவதிகாதிஶய ஸம்வேத்யகல்யாணகுணகணஃ என்று அருளிச்செய்வர்' என்றும் "இத்தைப்பற்றியிறே ஆளவந்தார் அருளிச்செய்த சந்தை" என்றும் வ்யாக்யாநங்களில் காணப்படுகின்றது. ஆளவந்தார் எந்த க்ரந்தத்தில் இப்படி ஸாதித்திருக்கிறார் ?

6) இனி யிரண்டாம் பாட்டில் 'இனனிலன்' என்பதன் விவரணம் "அவனோடு ஒவ்வாதென்று சொல்லுகைக்கு ஸத்ருசமாயிருப்பதொரு பதார்த்தத்தையுடையனல்லனென்கிறது" என்றிப்படி ஒன்பதினாயிரத்திலுள்ளது. இதில்

'ஸாதர்ம்யத்ருஷ்டாந்தத்தாலே சொல்லுகிறது' என்று பெரியவாச்சான்பிள்ளை புதிதாக ஒரு விஷயத்தைச் சேர்த்து ஸாதித்திருக்கின்றார். ஈட்டில் இன்னும் விரிவாக

பட்டர் "ஸாதர்ம்யத்ருஷ்டாந்தமில்லை யென்றது முன்பு. வைதர்ம்ய த்ருஷ்டாந்தமில்லை யென்கிறது இங்கு" என்று. வைத்ர்ம்யத்ருஷ்டாந்தத்திற்கு உதாஹரணம்- [illegible]

[illegible] ।

என்றிருக்கின்றது. இந்த த்ருஷ்டாந்தங்களின் ஸ்வரூபத்தைக்காட்டி அரும்பதகாரர் ஏதோ உபபாதநம் செய்திருக்கிறார். ஆகிலும் ஒன்றும் ஸ்பஷ்டமாயில்லை. முன் எப்படி ஸாதர்ம்ய த்ருஷ்டாந்தம், பிறகு எப்படி வைதர்ம்ய த்ருஷ்டாந்தம்? எல்லாம் அநந்விதமாகத் தோன்றுகிறது. 'துஷ்டசோரர்க்கு ஐச்வர்யமுண்டானால் எப்படி பரஹிம்ஸை பண்ணுவார்களோ அப்படி மஹாதேஜஸ்விகளுக்கு பலமுண்டானால் பரரக்ஷணம் பண்ணுவரென்று [illegible] இத்யாதிக்குப் பொருள்" என்று அரும்பதத்தில் உள்ளது அத்யந்தாஸம்பத்தம். ப்ரக்ருதத்திற்கும் இது அநுகுணமன்று. காவ்யப்ரகரணத்திற்கும் அநுகுணமன்று. ஈட்டு ஸ்ரீஸூக்தியில் பட்டர் என்று உபக்ரமித்தது 'என்று' என்பதுடன் அநந்விதமாய் நிற்கிறது.

7) சாஸ்த்ர ஸித்த உபாயங்களான பக்திப்ரபத்திகளுக்கு உபாயத்வத்தை பாதிக்கும் மூல ப்ரமாணங்கள் எவை? ஆசார்ய ஸ்ரீ ஸூக்திகள் ஸ்வயம் ச்ருதி ஸ்ம்ருதி பாதகங்களான ப்ரமாணங்களாகமாட்டா.

8) ஹேயமல்லாத துக்கத்திற்கு லக்ஷணமென்ன ? ப்ரமாணமென்ன? ஹேயமான துக்கத்திற்கும் அப்படியல்லாத துக்கத்திற்கும் பேதமென்ன ?

9) பிராட்டிக்கு ஈச்வரீம் ஸர்வபூதாநாம் இத்யாதிகளால் தோற்றுகிற ஈச்வரத்வத்திற்கு பாதகமான ப்ரமாணம் என்ன ? எங்கு யாரால் உதாஹரிக்கப்பட்டிருக்கிறது ?

10) ஸம்ஸாராணவதாரிணீம் இத்யாதிகளால் தோற்றும் உபாயத்வத்திற்கு பாதகப்ரமாண மென்ன ? யார் உதாஹரித்திருக்கிறார்கள்?

11) "ஜாதி வ்யக்திதோறும் பரிஸமாப்யவர்த்திக்குமென்றால் அசித்பதார்த்தத்திற்கு இது கூடுமென்றிருப்பார்கள். பரமசேதநனுயிருப்பானொருவன் பரிஸமாப்யவர்த்திக்குமென்றால் இது கூடாதேயென்று ஸம்சயியா நிற்பர்கள்" என்றவிடத்தில் சேதநத்வாசேதநத்வ ப்ரதிபாதநமெதற்கு? அசித்பதார்த்தங்களான அக்நிஜலங்களுக்கு உள்ள உஷ்ணத்வ சீதளத்வங்கள் பரமசேதநனை ஒருவனுக்கு ஏன் இருக்கக்கூடாது? என்றால் அதற்கும் இதற்கும் என்ன விசேஷம்?

உத்பந்நாநாம் ப்ரஸூநாம்
கதம் வா ஸ்வபாவஸ்வஜாத்ய ।
ஜாதிவ்யக்தி ஸ்வபா-
வாக்ருஷ்டம் தத: ப்ரதிஷ்டம் ॥

---

7. உபஸம்ஹாரம்.

ஶீர்ணம் க்ஷேமா வ்ருதம் விவேக: என்கிற ரீதியில் எவ்வளவு பற்றுடனும் முயற்சியுடனும் காப்பாற்றப்பட்ட போதிலும் அத்யைவ வாப்தஶதாந்தே வா என்றும் ஜாதஸ்ய ஹி த்ருவோ ம்ருத்யு: என்றுஞ் சொல்லுகிறபடியே ஒரு நாள் இந்தபிண்டம் விழுவது நிச்சயமாதலாலும், அப்போது ததிதஷம் ஸ்ருஜதி ஜந்தோர்விஹ க்ஷணாயேது என்றபடி அதிகோரமான பாபராசியை அநவரதம் செய்துவருவதின் பலமாக பஹுகாலாநுபாவ்ய விவித நரகலோக நயநார்த்தம் ஸம்ஹாரம் ஸம்வீக்ஷணசாபஊர்த்வ ஜ்ஞன க்ருதாந்தன் வந்து தோன்றிக் கட்டி இழுப்பது சாஸ்த்ரப்ராமாண்யத்தாலே ஸுநிச்சிதமாதலாலும், அதற்குப் பரிஹாரமாக ஆத்யஸ்த்ர ஜஞ்ஜலிவஸ தவ நிக்ரஹாஸ்த்ர எனப்பட்ட அஞ்சலியைச் செய்யாமையாலும், அநேக கல்பகோடிகாலம் இவர்கள் அபரிஹார்யமாய் அநுபவிக்க வேண்டிய யாதநாவிசேஷங் களையும், ப்ரபந்நர்களிடத்தில் இவர்கள் படும் அஸஹ்யாப சாரநிமித்தமாக த்விஷஞ்: பாவகஸ்யாத்ர மென்றபடி அத்தனைபேர்களுடையவும் அநாதிகால ஸஞ்சித அநந்த பாபராசிகள் ஸங்க்ரமித்து அவற்றின் பலமாக அநுபவிக்க வேண்டிய யாதநா விசேஷங்களையும் அநுஸந்தித்து நடுங்கி, அநியாயமாய் ஏன் இப்படி இந்த சேதநம் நசித்துப்போக வேண்டுமென்று தபித்து, ஶ்ரீகாருண்யஸாகராதேவீ என்றபடி அந்திமதசையிலாவது விவேகம் பிறந்து நல்வழி நடக்கட்டுமென்று கருதி, ஹார்த்தமாக

விநஶ்யந்தீ ஸம்ஸாரஸங்கம் விக்ஷஸ்வாமீ ஹ்ருதயம் ।
கலிம் நிஹத்ய காருண்யம் காருண்ய ஜந்ம ஹதாம் ஹரே: ॥

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

என்று எம்பெருமானை ப்ரார்த்தித்து இந்த ஸஜ்ஜநாராதநத்தை நிகமிக்கின்றோம்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

அநுபந்தம் 1.

ப்ரபத்த்யுபாயத்வம்.

'ப்ரபத்த்யுபாயத்வசோதனம்' என்று பெயரிட்டு ஒரு நூல் எழுதி சில விஷயங்களைச் சொல்லியிருக்கின்றனர். அவற்றைப்பற்றிச் சொல்ல ப்ராப்தமானதை இங்கு சொல்லுகின்றோம்.

1) இதுவரையில் ப்ரபத்தி உபாயமன்று, உபாயமன்று, என உருப்போட்டு வந்தவர்கள் இனி தீர்க்கமாய் நடக்கப் போகும் சர்ச்சைகளில் எப்படியும் "நமது பக்ஷம் பங்கப்படுவது நிச்சயந்தானே" யென்பதை ஒருவாறு உணர்ந்து அந்த அபிநிவேசத்தைத் தளர்த்தி "அது உபாயந்தான். ஆனால் அதை உபாயமாகப் பற்றுமவர்கள் மந்தாதிகாரிகள். உத்தமாதிகாரிகள் அதை உபாயமாகக்கொள்ளாதே உபேயமாகக் கொள்வர். ஆகையால் உபாயத்வத்தை நாம் மறுக்கவில்லை" என்கின்றனர்.

> "ப்ரபத்தியை உபாயமாகக் கொள்வாரைத் தடுக்க வல்லாருண்டோ? ஒட்டு மாம்பழத்தைப் பறித்து விற்பனை செய்பவன் ஒருவன். திருத்தி புஜிப்பவனொருவன். விற்பவனுக்கு அது உபாயமாய், புஜிப்பவனுக்கு உபேயமாகிறது. அதிகாரிகளுக்குத் தக்கபடி உபாயத்வத்தையும் உபேயத்வத்தையும் கொண்டிருக்கிற ஒரு வஸ்துவிலே உபாயத்வத்தைத் தடுப்பாரார்?
>
> ஸாரமான வார்த்தை இவ்வளவே; ப்ரபத்தியானது அதமாதிகாரிகளுக்கு அல்ப பல ஸாதனம். மத்ய

> மாதிகாரிகளுக்கு மோக்ஷ பல ஸாதனம். "நல்வீடு பெறினும் கொள்வதெண்ணுமோ தெள்ளியோர் குறிப்பே" என்றிருக்கு முத்தமாதிகாரிகளுக்கு அது உபேயமேயொழிய உபாயமன்று. உபாயந்தானென்று முஷ்டி பிடிக்கிறவர்கள் தங்கள் அதிகாரத்திற்குச் சேர அங்ஙனே வாதிப்பது மிகப் பொருந்தியதே

என்று எழுதியிருக்கின்றனர். ப்ரபத்தி மோக்ஷ ஸாதநம் என்பதும் மோக்ஷத்திற்காக அதை அநுஷ்டிப்பவர்கள் அநுஷ்டிக்கலாம் என்பதும் இந்த விஷயத்தில் தமக்கு விப்ரதிபத்தியில்லை என்பதும் இதனால் இப்போது இசையப்பட்டிருக்கிறது. வேதாளம் மறுபடியும் மரத்திலேறிக் கொண்டது என்கிற கதையாய் ஆகாமல் எந்தக் காரணத்தினாலும் இனி இவர்கள் இதை மாற்றிக்கொள்ளாமல் இருந்தால் மேல் விசாரம் நடக்க ஸௌகர்யமாயிருக்கும். (அது தானில்லை).

நிர்க்குணப்ரஹ்மாவாதிகளான அத்வைதிகள், அதை க்ரஹிக்க சக்தியிராமையால் நாம் எல்லோரும் மந்தாதிகாரிகளென்றும் அதற்காக ஸகுணநிரூபணமும் செய்யப்படுகிறதென்றும் சொல்லிவைத்திருக்கிறார்கள். [illegible] ஸவிசேஷ நிரூபணம்; என்று. இந்த ரீதியில் இப்போது நமக்கு ஏகதேசிகளிடமிருந்து இன்னொரு மந்தாதிகாரிப்பட்டம் கிடைத்திருக்கிறது. அஸ்து.

இவர்கள் மோக்ஷார்த்தப்ரபந்நர்களை மாம்பழம் விற்பவனோடு ஒப்பிட்டது சேராது. ஒருவர் மோக்ஷத்திற்காகவும் மற்றொருவர் ஸ்வயம்ப்ரயோஜநமாகவும் ப்ரபத்த்யநுஷ்

டாநம் செய்கின்றனர். ஒருவர் பலத்தை உத்தேசிக்கிறார். மற்றொருவர் உத்தேசிக்கவில்லை. ப்ரபத்த்யநுஷ்டாநம் இருவருக்கும் ஸமாநம். மாம்பழ விஷயம் இப்படிப்பட்டதன்று. புஜிப்பவர் ரஸாநுபவம் பெறுகிறார். விற்பவன் மாம்பழத்தையே இழந்துவிடுகின்றான். ஆகையால் புஜிப்பவருக்குப் பணமில்லை, விற்பவனுக்குப் பணம் கிடைக்கின்றது என்று லாபத்தைப்பற்றிய விசேஷம் ஒருபுறமிருக்க பழத்தைப் புஜிப்பது புஜியாதிருப்பது என்ற விசேஷமுமிங்குளது. ஆகையால் இந்த உபமை பொருந்தாததொன்று. ஒரு வியாதி நீங்குவதற்குரிய மருந்தாக ஒட்டு மாம்பழத்தைப் புஜிக்கும்படி ஒரு வைத்யர் சொன்னாரென்று வைத்துக் கொள்வோம். அந்த வியாதி உள்ள ஒருவர் அதைச் சாப்பிடுகிறார். ஆரோக்ய பூர்ணரான ஒருவரும் சாப்பிடுகிறார். இந்த ரீதி தான் ப்ரக்ருதத்திலுள்ளது. இதில் இவர்களும் ஸ்வயம்ப்ரயோஜநமாகவாவது ஸாங்கப்ரபதநம் அநுஷ்டிக்கிறார்கள் என்பதும் இசையப்பட்டிருக்கிறது என்பதையும் மறக்கக்கூடாது.

இனி ஆலோசிக்கப்படவேண்டிய விஷயமென்னவெனில் இவர்கள் முமுக்ஷுக்களா? முக்தர்களா? முமுக்ஷையில்லாதவர்களா? முமுக்ஷுக்களாகில் முக்திஸாதனமான ப்ரபத்தியை அதற்காக அநுஷ்டிக்கவேண்டிய மந்தாதிகாரிகளே யாவர். அநுஷ்டிக்காதபோது 'ஶ்ரவணாதிரஹிதாநாம் ந ஸித்திர்மோக்ஷோ நிஜவத்' என்றபடி முக்திபெறமுடியாது. நம் ஸித்தாந்தத்தில் ஜீவந்முக்தி அங்கீகரிக்கப்படாமையால் ஸ்ரீ வைகுண்டத்திலுள்ள முக்தர்கள்போல் இங்கு இவர்கள் ஸ்வயம் பலமான ப்ரபத்த்யநுஷ்டாநம் செய்கின்

றனர் என்பது சேராது. முமுக்ஷுயிராதவர்களென்னில் ப்ராப்யருசியும் ப்ராப்தியில் த்வரையும் இராதவர் என்றதாகும். அப்போது அவிவேகிகள்போல அதிகாரமே பெருமிருக்க உத்தமாதிகாரித்வம் ஆரோபமாத்ரமாகும். இப்படிப்பட்டவர்கள் ஓர் உத்தேசமில்லாமல் செய்யும் ப்ரபத்தியானது ப்ரதக்ஷிண ப்ரணாமாதிகள்போல் ஸாமாந்ய ஸுக்ருதமாய் பரம்பரயா பக்தி ப்ரபத்த்யந்யதரத்தை உண்டாக்கி மோக்ஷத்தில் பர்யவஸிக்குமத்தனை. கிஞ்ச

ஸ்வயம் ப்ரயோஜநத்வேந ப்ரபத்திர்யத்யபீஷ்யதே ।
தஸ்யா: ஸ்வரூபம் கிம் நாம தத்விவிச்ய நிரூப்யதாம் ॥

‘த்வமேவோபாயபூதோ மே பவேதி ப்ரார்த்தநாமதி:’ என்று ப்ரபத்திஸ்வரூபம் ப்ரஸித்தம். ஸ்வயம் போக்யமாக இதைச் செய்யுமவர்கள் எதற்கு உபாயபூதோ பவ என்று ப்ரார்த்திப்பது? இத்யபேக்ஷாயாம் ।

பக்தி ஸாதநபக்தி யென்றும் ப்ரபத்தி ஸாத்யபக்தி யென்றும் வ்யவஹரிக்கப்படுகின்றது. த்வமேவோபாயபூத:, அஹம் த்வா ஸர்வபாபேப்ய: என்கிறபடி அவனே ஸாக்ஷாத் உபாயனாய் ப்ரபத்தியின் உபாயத்வம் தோற்றாதே நிற்பதைக் கருதி இதற்கு ஸாத்யத்வம் அதாவது பலத்வம் கொள்ளப்படுகின்றது. இது புதிய விஷயமன்று.

2) வைகல்யம் வா ஸ்வதோ ந த்விதீயாபேக்ஷ: என்றது ப்ரத்யுத்ஸ்ருஜ்ய தவ நிர்ஹேதுகே என்று

பிறந்த உபாயநிஷ்பத்திக்குப்பிறகு '[illegible]' என்றபடி இங்கு நடக்கும் ஆநந்தாநுபவ ருசியாலே ஸாதித்தபடி. '𑌮𑍁𑌕𑍍𑌤𑌃 𑌸𑍍𑌵𑌯𑌂' என்று முக்தியை ப்ரார்த்தித்தவரே இவர்.

3) '[illegible]' என்றவிந்த ந்யாஸதிலக ஸ்ரீஸூக்தியில் ஸ்வமோக்ஷார்த்தம் ஸ்வயம் ப்ரபத்தி அநுஷ்டிக்குமவர்களைக் காட்டிலும் ஆசார்யநிஷ்டையைப் பற்றினவர்கள் சிறந்தவர்களெனப் படுகின்றது. ஆசார்ய ப்ரபத்தியிலேயே சிஷ்யர்களும் அந்தர்ப்பூதர்களானபோது இவர்கள் தம்முடைய முக்திக்காக தாம் எம்பெருமானை உபாயமாகப் பற்றுமல் முக்தர்கள் போல் போக்யதைகயே பற்றுகிறார்கள் என்று கருத்து. '[illegible]' என்றல்லவோ ச்லோகத்தின் ஆரம்பம். இதனால் ஸ்ரீவசநபூஷணத்தின் முடிவில் "சாஸ்த்ரவிஹிதங்களான பக்தி ப்ரபத்திகள் உபாயங்களல்ல. ஆசார்ய ஸம்பந்தமே நிச்ரேயஸஹேது" என்றருளிச் செய்ததை யதாச்ருதமாகக் கொள்ளக்கூடாது. தாத்பர்யமிது, என்று விசதீகரிக்கப்பட்டதாகக் கொள்வர் அபிஜ்ஞர்கள். இங்கு ஒரு பெரிய பாம்புக்கதை எழுதி

> அவரவர் தம்தம் கொள்கைக்கும் பழக்கத்திற்கும் தக்கபடி வஸ்துக்களின் தன்மைகளை க்ரஹிக்கிறார்களத்தனை

என்று முடித்தது, இது பரம சாஸ்த்ரார்த்த விஷயம் என்பதை உணராது மனிதர்களின் ஸ்வபாவ பேதங்களைப் பற்றிப் பேசும் ப்ரகரணமாக நினைத்ததின் பலனாகும்.

4) "[illegible]" என்றும் ப்ரார்த்திக்கிருர்கள். உபாயமாயிருந்தால் இப்படி ப்ரார்த்திப்பார்களா?" என்று கேட்கின்ருர்கள். உபாயமாயிருக்கிறபடியால்தான் ப்ரார்த்திக்கின்ருர்கள். "[illegible] ... [illegible]" என்று ஸ்ரீமத்கீதா பாஷ்யத்தில் பக்திக்கு அங்கமாகவன்ருே ப்ரபத்தி விதிக்கப்படுவதாக இரண்டாவது யோஜநை. அது மோக்ஷ ஸாதநமான பக்தியின் ப்ரார்த்தனைதானே.

கடையிலோ வேறிடத்திலோ பணத்தை யாசநம் பண்ணிப்பெறுவது உண்டு. அங்கு யாசநத்திற்குப் பலம் பணமானலும் அபிமதமான வேறு பொருள்களைப்பெற ஹேதுவாகையாலே அவற்றைப்பற்றி பணத்திற்கு உபாயத்வம் உளவேஉளது. மோக்ஷாய ப்ரபத்திநடந்தபிறகு ப்ரார்த்திக்கப்படும் பக்தி ஸ்வயம்போக்யமென்பது யுக்தம்.

5) [illegible] என்கிற ஸ்ரீ வைகுண்டஸ்தவத்தின் அந்திமச்லோகத்திலும் பக்த்யாதி நிஷ்பத்தி ப்ரார்த்தனையே செய்யப்படுகின்றது. வேறு ஏதோ அங்கு சொல்லப்பட்டதாக நினைத்திருப்பது தவறு.

6) [illegible] என்றவிடத்தில் 'குணமல்ல. ஸ்வரூபமே' என்று விதேயம் வ்யாவர்த்யம் இரண்டும் கண்டோக்தமாயிருக்க 'உபாயத்வம் அவனுக்குத்தான். வேறுஎதற்கும் கிடையாது' என்று வேறுவிதமாய் விவரிப்பது ப்ராமாணிகமன்று.

7) "ப்ரபத்தி உபாயமென்ருல் எம்பெருமான் உபாயமென்று தேறுகின்றது." என்பது பர்யவஸாநரீதியில்

வாஸ்தவமே. ப்ரபத்தி ஸாத்யோபாயமென்னும் போது அது பொருந்தாது. "சரண்யவசீகரணமாய் புருஷனுக்கு ஸாத்யமாக விதித்த ப்ரபத்தி தன்னையே ஸித்தோபாய மென்னவொண்ணாது. பூர்வ ஸித்தனாய் அவஸரப்ரதீக்ஷ னாய் வ்யாஜமாத்ர ப்ரஸாதநீயனாய் நிற்கிற ஸ்ரிய:பதியே ஸித்தோபாயம். இது பக்தி ப்ரபத்திகளைப்போல் ஒன்றால் ஸாத்யமன்று ... ... தத்ப்ரஸாதமாத்ரமே ஸாத்யம். ஆகை யால் அடைக்கலமடைந்த என்கிற ஸாங்கபரந்யாஸம் அதி காரி க்ருத்யம். ஸமர்ப்பித பரஸ்வீகாரம் ஸித்தோபாயமான ஈச்வரக்ருத்யம்" என்று தேசிகன் ஸ்ரீ ஸாரஸாரத்தில் ஸாதித்திருக்கின்றார்.

8) "ஒரு ஸாதநாநுஷ்டானம் வேணுமென்று நிர்ப்பந்த முண்டாகில் இந்த ப்ரபத்திக்கு மேற்பட ஒரு ஸாதநமும் கிடைப்பதரிது" என்னுமிடத்திலும் ப்ரபத்தி ஸாதநமென் றே அங்கீக்ருதமாகிறது.

"இந்த அஞ்ஜலியையே விலையாகக் கொள். வேறு விலை என்னிடம் எதிர்பாராதே" என்னுமிடத்தில் அஞ்சலி முக்யவ்ருத்த்யா விலையாகாது என்பது உண்மை. ஆனால் அபேக்ஷிதமான பொருளைப் பெறுவதற்கு அது ஸாதநமே. ஔபசாரிகமாக விலையுமாகலாம். குணக்ரீத: விலையில்லா மல் க்ரயம் ஏது ?

9) ஒருவன் கடையிலே போய் கடைக்காரன் கொடுத்த காசைக் கொண்டே ஒரு பீதாம்பரம் வாங்கி யணிந்து கொண்டு 'இதை நான் விலை கொடுத்து வாங்கினேன்' என்று சொல்லத் துணிவனா ? என்று கேட்கப்படுகிறது. காசைக் கொண்டே வாங்கினானாகில் ஏன் அப்படி சொல்லக்கூடாது?

நன்றிபாராட்டிச் சொல்லவேணுமாகில் கடைக்காரன் உதவிய காசையே விலையாகக்கொடுத்து வாங்கினேன் எனலாம். இதில் என்ன குற்றம்? முதலில் தாந ப்ரதிக்ரஹங்கள் நடக்கின்றன. பிறகு க்ரய விக்ரயங்கள். விரோதமொன்றுமில்லை.

சுஹஸ்வெஙஸாஷீெ8 ஹவெ௸ விவாாா ஶ ௦யூவய௲காஃ

10) 'இது தனக்கு ஸ்வரூபம் தன்னைப் பொருதொழிகை' இத்யாதிகளில் விவக்ஷிக்க வேண்டிய வர்த்தத்தை ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸார சரமச்லோகாதிகாரத்தில் ஏக சப்தார்த்த ப்ரகரணத்தில்

> இப்ரபத்தியும் பக்தியோகம் போலே ப்ரஸாதநமாக விதிக்கப்பட்டிருந்ததேயாகிலும் ஸஹஜ காருண்யாதி விசிஷ்டனான ஸர்வேச்வரனுடைய காலுஷ்ய சமநமாத்ரார்த்தமாய், ஸாக்ஷாத் பலத்துக்கு ஸஹஜ ஸாமர்த்த்ய காருண்ய விசிஷ்டனானவிவன்நினைவே காரணமாம்படியாய், அவன் தானே அத்யந்தாகிஞ்சனான ப்ரபந்நனுக்கு பரஸ்வீகாரத்தாலே பக்தியோகாதிகளான குருதரோபாயங்களின் நேரே நின்று **இவ்வாநுகூல்ய ஸங்கல்பாதியுக்த ப்ரபத்திமாத்ரவ்யாஜ ஸாபேக்ஷனாய்**, வேறொன்றுமபேக்ஷையில்லாமையால் நிரபேக்ஷோபாயத்வமே இந்ந்யாஸ வித்யைக்கு வேத்யாகாரமாகக்கொண்டு கூெ8ெவா௲வாயஹ௵ெதா ௭8 ஊவ என்று அபேக்ஷணீயனாயிருக்க "என்னுணர்வினுள்ளேயிருத்தினேனதுவுமவனதின்னருளே" என்றும், "இசைவித்தென்னையுன் தாளிணைக்கீழிருத்துமம்மானே" என்றுஞ் சொல்

லுகிறபடியே உபாயபூதனை அவன் செய்விக்கச் செய்கிற வ்யாஜமாத்ரத்தை அவனோடொக்க உபாய மாகவெண்ணுகை யுசிதமன்றென்று ஏக சப்தத் துக்குத் தாத்பர்யம். இப்படி ஸித்தோபாயத்தைப் பற்ற ஸாத்யோபாயம் வ்யாஜமாத்ரமாய் இது ப்ர தாநமன்றிக்கே நிற்கிற நிலையைப்பற்ற ஸம்பந்த ஜ்ஞாநமாத்ரம்......என்றிப்புடைகளிலே அதிவாதம் பண்ணினூர்கள். இவ்வந்யபரோக்தியைக் கொண்டு இவை தானே யர்த்தமென்ற றுதியிடவொண்ணுது. இவையெல்லாம் 'சரணம் வ்ரஜ' என்ற விதிக்கு விருத்தங்களாம்

என்று நிஷ்க்ருஷ்டமாய் விசதமாய் தேசிகன் அருளிச்செய் திருக்கின்றுர். எம்பெருமானே உபாயமென்று சொல்லி அவ னுக்குத் துல்யமாக க்ஷணகால ஸாத்ய அத்யல்ப வ்யாபார மான ப்ரபத்தியையும் உபாயமென்பது ஸர்வதா சேராது. இது உண்மை. ஆனுல் இந்த அத்யந்த வைலக்ஷண்யமடி யாக வஸ்துவ்ருத்தியில் ப்ரபத்தி உபாயமே அன்றென்பது ப்ரபத்தியை உபாயமாகிற விதிக்கிற சாஸ்திரத்திற்கு விருத் தமாகையால் அநுபபந்நமென்றதாயிற்று.

11) உபாயவிபாகாதிகாராரம்பத்திலுள்ள 'உவாயஃ ஷூ- ஹூவெஃ' என்கிற ச்லோகத்தை எடுத்துக்கொண்டு இப்போது ஏதோ அபாரஸம்ப்ரமத்தைக் காட்டிக் கொண் டாடுகின்றுர்கள். இதன் கருத்தைச் சொல்லுமிடத்தில் இவர்கள் "பக்தி ப்ரபத்திகள் உபாயமல்ல" என்றது இந்த அதிகாரத்தின்பெயருக்கும், 'இவற்றிலுபாயமாகிற ஜ்ஞான விகாஸ விசேஷம்' 'அவ்வுபாஸநமாகிற உபாயத்தை' என்

றுள்ள மேல் விவரணங்களுக்கும் விருத்தம். உபாய: ஸு-ஸாத்ய: என்று மோக்ஷபலத்தைச் சொல்லி ஸுஸேவ்ய ஸுகஸாதக என்று ததர்த்தமாக பக்தி ப்ரபத்திகளைச் சொல்லியிருக்கத் தாமிசைந்த உபாயத்வத்தை இங்கே மறுப்பது ஸ்வோக்திக்கும் விருத்தம்.

'நிஷ்டம் தத்ராபி ஸ்வயமபி நிர்மாணநிபுண:'

என்ற நாலாம் பாதத்தில் புதிதாக என்ன அர்த்தம் இப்போது கண்டுபிடித்துவிட்டார்களென்பது விளங்கவில்லை. நர்த்தனம் ஸீமாதிலங்கியாயிருக்கின்றது.

> ஸகல சாஸ்த்ரார்த்தங்களும் இதில் அடங்கிவிட்டன. "தத்ராபி ஸ்வயம் நிதானம்" என்று வேதாந்தகுரு நிஷ்கர்ஷித்தருளினபிறகு நம் தலையிலே ஒன்று கிடப்பதாகவும் அது ஸாதநமாகிறதாகவும் வாய்திறக்க வழியுண்டோ"

என்கிறார்கள்.

• ஸ்ருஷ்டிதவ பாதிஸ்வாஸ ஸஞ்சிஸ ஸஞ்சிஸ தஸா தஸா ।
ஸம்ப்ரத்யுபாஸ்த்ய ஜக்தி ஜிதகாமிந: ॥

உபாயபூதனை எம்பெருமானுடைய ப்ரஸத்திக்கு ஹேதுப்ரபதநம். இதை நாம் அநுஷ்டிக்கவேண்டும். இதில் விப்ரதிபத்தியில்லை. இப்படி நாம் அநுஷ்டிப்பது மஹாஸுக்ருதபலம். நாம் முன் செய்த பெரும் ஸுக்ருதமொன்று இராதிருக்குமாகில் ஆசார்ய கடாக்ஷம், தத்த்வத்ரயவிவேகம், முமுக்ஷை, ப்ரஸாதநாநுஷ்டானம் ஒன்றும் நடவாது. இதிலும் விவாதாஸ்பதம் ஒன்றுமில்லை. இப்படிப்பட்ட மஹா ஸுக்ருதமொன்று நாம் செய்ததற்கும் அதன் பலமாக

மேல்வரும் ஸர்வ சுப பரம்பரைக்கும் எம்பெருமான் ப்ர தானகாரணபூதன் என்று 'நிதாநம் தத்ராபி' என்றவித்தால் அருளிச் செய்யப்படுகிறது. த்ரிவிதசேதநாசேதநஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகள் எல்லாம் பராதீநமாகையாலும் அதனால் அவனே ப்ரதாநகாரணபூதனுயிருப்பதாலும் நாம் செய்யுமவற்றிலும் அவனே கர்த்தா அவனே பலீ என்றிப்படி அநுஷ்டிக்கப்படவேண்டிய ஸாத்விக த்யாகத்திற்கு உறுப்பாக இது இங்கு ஸாதித்தது. இதனால் 'நம் தலையில் கிடக்கும் ஸ்வீகாரம் அதாவது ப்ரபத்தி எப்படி ஒழியும்? அதற்குள்ள உபாயத்வம் அதாவது ப்ரஸத்தி ஹேதுத்வம் எப்படி ஒழியும்? இங்கு வைசத்யாபேக்ஷிகள்

இங்கு காருண்யமாவது பரஹிதப்ரவணதை. இது த்ரிவிதசேதநர்களுடைய ஸத்தாஸ்திதிகளுக்கும் அநுகூல வ்ருத்திகளுக்கும் ... ... லீலா விபூதியில் ஸாமாந்யஸ்ருஷ்ட்யாதிகளுக்கும் ஸ்வாவதாரரூபையான சுத்த ஸ்ருஷ்டிக்கும், சாஸ்த்ரப்ரவர்த்தநத்துக்கும் அதடியாக தத்த்வஹித விஷயமான ஜ்ஞாநத்தைப் பிறப்பிக்கைக்கும், மோக்ஷச்ரத்தையை யுண்டாக்குகைக்கும், இது கொடுக்கைக்கு வ்யாஜமான ஸுக்ருதவிசேஷத்துக்கும் அதிகாராநுரூபங்களான நிக்ரஹ சமநோபாயங்களைக் கொடுக்கைக்கும் ... அகிஞ்சநர்க்கு உபாய ஸ்தாநத்திலே நின்று நிரபாயமாக ரக்ஷிக்கைக்கும் ...... ப்ரதாநமான ஸாமாந்ய நிதாநமாயிருக்கும். இப்படிப்பட்ட க்ருபா விசிஷ்டனான ஈச்வரன் ஸித்தோபாயம். இவனுக்கு ப்ரஸாதநங்களான பக்திப்ரபத்திகள் ஸாத்யோபாயங்கள் ... ஆகையால் ப்ரபத்தியுங் கூட உபாய மன்றென்று

சிலர் அதிவாதம் பண்ணுகிறதுவும் ஸித்தோபாயத்தினுடைய ப்ராதாந்யமடியாக வித்தனை

என்றுள்ள ஸித்தோபாய சோதநாதிகார ஸ்ரீஸூக்திகளை ஸேவிப்பது. இப்படி வைசத்யம் உண்டானபோது பிள்ளை லோகாசார்யருடைய சூர்ணிகளை எப்படிக் கொள்வது என்பது விளங்கும்.

1. இத்தால் வ்ரஜ என்கிற ஸ்வீகாரத்தில் உபாயபாவத்தைத் தவிர்க்கிறது

இதில் 'உபாயபர்வத்தை' என்றவிது 'பெறும் மஹாபேற்றுக்கநுரூபமான உபாயம் என்கிற புத்தியை' என்னும் பொருளில் கொள்ளப்படும். அந்யதா

2. ஸ்வீகாரந்தானும் அவனாலே வந்தது

என்று ஸ்வீகாரமென்னும் ப்ரபத்தியை அவன் க்ருபையாலே நிஷ்பந்நமானதாகவருளிச் செய்தது சேராது.

3. ஸ்ருஷ்ட்யவதாராதி முகத்தாலே பண்ணின க்ருஷி பலம்

என்றவிது

ஸஹ்யோபநதேஸ்தவ ஸ்ருஜ்வாபேஹ-
   ரநுகம்பே க்ருதஸம்ப்லவா யவித்ரீ ।
ஶரணாகதஸஸ்யமாலினீயம்
   வ்ருஷஶைலேஶக்ருஷீவலம் திநோதி ॥

என்று தயாசதகத்தில் பூர்ணரூபகவிந்யாஸத்தாலே விவரிக்கப்பட்டது.

4. அதுவுமவனதின்னருளே

என்றது எம்பெருமானுக்கு ஸர்வப்ரவ்ருத்தியிலுமுள்ள

ப்ரயோஜககர்த்ருத்வபரமென்று முன்பே காட்டப்பட்டது.

5. இத்தை யொழியவும் தானே காரியம் செய்யுமென்று நினைக்கக்கடவன்.

6. அல்லாதபோது உபாயநைரபேக்ஷ்யம் ஜீவியாது என்ற இவ்விரண்டையும் யதாச்ருதமாகக் கொள்வதற்கில்லை. ரக்ஷாபேக்ஷாம் ப்ரதீக்ஷதேயாகையால் இத்தை யொழிந்தால் தானே காரியம் செய்யுமென்று நினைப்பதெப்படி? உபாயத்திற்கு நைரபேக்ஷ்யம் பக்த்யாதிஸாபேக்ஷத்வமில்லாமையாலே யாதலின் ப்ரபத்திஸாபேக்ஷதை அதற்கு பாதகமன்று.

உபாயபூதனான எம்பெருமான் ஸித்தனேயாகிலும் வைஷம்ய நைர்க்ருண்யாதி தோஷப்ரஸங்கத்தாலே ஸ்வீகாரம் பண்ணாதவர்களுக்குப் பலன் கொடான். ஆகவே ஸ்வீகாரஸாபேக்ஷனாகவே பலப்ரதனாகிறானென்ன வேணும். அப்போது இத்தாலே நிரபேக்ஷனாயிருந்தே பலந்தருமென நினைப்பது அயதார்த்தஜ்ஞாநமாம். இத்தை தேசிகன் தாமே

> ஸ்வவிஷயஸ்வீகார விசிஷ்டமாய்க்கொண்டு பலப்ரதமாகாநிற்கச்செய்தே இஸ்ஸித்தோபாயம் ஸ்வீகாரத்தாலும் நிரபேக்ஷமென்று புத்தி பண்ணவேணுமென்னில் இது த்ருஷ்டி விதிபோலே ஆரோபிதமாதல் ஸ்வவசந விருத்தமாதலாம்

என்று சரமச்லோகாதிகாரத்தில் ஸாதித்தருளினார். இப்படி இவ்விரண்டு வாக்யங்களுக்கு யதாச்ருதார்த்தம் கொண்டபோது அநுபபத்தி உண்டாதலின் முதல் வாக்யத்

தில்போலே உபாயத்வ புத்தி பரித்யாகத்திலேயே நோக்கென்று கொள்ள ப்ராப்தம். ஆகவே பிள்ளைலோகாசார்யரும் ஸ்வீகாரமென்கிற ப்ரபதநத்தை நாம் அநுஷ்டிக்க வேண்டுமென்கிறுர் என்பது ஸ்பஷ்டம். "இவ்வுபாயந்தான் ஓராகாரத்தாலே ஸாபேக்ஷமுமாய் ... இருக்கும். எங்ஙனேயென்னில் ஆச்ரயணகாலத்தில் அதிகாரிஸாபேக்ஷமுமாய்" என்ற தனி சரம ஸ்ரீஸூக்தியாலுமிது வ்யக்தம்.

𑌅𑌤𑍋 '𑌨𑌿𑌧𑌾𑌨𑌂 𑌤𑌦𑍍𑌵𑌾𑌵𑍀' 𑌤𑍍𑌵𑌦𑍇𑌨 𑌶𑌰𑌣𑌾𑌗𑌤𑍇𑌃 ।
𑌅𑌨𑌨𑍍𑌤𑌰𑍋𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌵𑌿𑌸𑍍𑌪𑌷𑍍𑌟𑌾 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑌤𑍍𑌯𑌾𑌗𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌕𑌃 ॥

12) ஸ்வாமிந் ஸ்வசேஷமென்ற ச்லோகத்தில் ந்யஸ்யஸி என்று பரந்யாஸம் நடப்பதாகச் சொல்லி அதனுடைய பல கர்த்ருத்வாதிகளெல்லாம் அவனுடையதே என்று ஸாத்விக த்யாகம் ப்ரதிபாதிதமாயிருக்கிறது. இவ்விடத்தில்

> "நாமே நம்மை ரக்ஷித்துக்கொள்ளுகிறேமென்றிருக்க ப்ராப்தமில்லை. ஸர்வ ரக்ஷகனுக மூல மந்த்ராதிகளிலே சிக்ஷிதனுன இவன் தானே நம்மை ஒரு உபாயத்திலே வ்யாபரிப்பித்து அந்த வ்யாபாரத்தாலே ப்ரஸந்நனுய் ரக்ஷிக்கிறுனென்றிருக்க ப்ராப்தம்.
>
> 𑌸𑍍𑌵𑌾𑌮𑍀 𑌸𑍍𑌵𑌶𑍇𑌷𑌂 ... 𑌇𑌤𑌿 𑌸𑍍𑌵𑌯𑌂 ।
>
> இது ஆத்ம ஸமர்ப்பண தசையில் க்யாதி லாப பூஜா பலஸங்க கர்த்ருத்வோபாயத்வங்களாகிற தூராலற்ற பகவதநுஸந்தாநக் கட்டளை. ஆகையால் தாய் முலைப்பால் போலே வருகிற வீச்வர ப்ரஸாதத்துக்கும் ஸ்தநந்தயனுடைய முலையுண்கிற வ்யாபாரம் போலே இவனுடைய வபேக்ஷாதிகள். இத்தால் ஸித்தோபாய ஸ்வரூபத்துக்குக் கொத்தை வாராது"

என்றுள்ள ஸித்தோபாய சோதநாதிகார ஸ்ரீஸூக்தியை யநுஸந்திப்பது நலம்.

"இதில் உயிரான உத்தரார்த்தத்தை புந:புநர் மனனம் பண்ணவேண்டும். ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணும்படி புத்தியைக் கொடுத்ததும் அவனே. ஆத்ம ஸமர்ப்பணத்தைப் பண்ணிக்கொண்டதும் அவனே. அதனாலாகும் பலனைப் பெற்றுக்களிப்பதும் அவனே'—என்றன்றோ ஸ்பஷ்டமாக அருளிச்செய்கிறார்" என்றது உண்மை. தத்த்வார்த்தமிது. ஆனால் அவன் பண்ணிவைக்கும் பரஸமர்ப்பணம் இவன் தலையிலுண்டு என்பதை மறக்கக்கூடாது. "மத்ப்ராப்த்யநுகுண உபாஸந விபாகம் ததாமி" என்று உபாயத்தையே கொடுக்கிறேன் என்கிறான் எம்பெருமான்.

இந்தச்லோகத்தில் 'ஸ்வாமிந்' என்றபதத்தின் ப்ரக்ருதியான 'ஸ்வ' என்றவிது ஸொத்து அதாவது உடைமை என்ற பொருளைக் குறிக்கின்றது; ஸ்வசேஷமித்யாதிகளில் போல் ஆத்மவாசியன்று.

13) முடிவில் "ஸாதனமாக ஒன்றைப் பற்றவேணுமே, எதைப் பற்றுவது என்று சங்கை. ப்ரபத்தியைப் பற்றுவது என்று ஸமாதானம்" என்ற வரையில் உண்மைப்பொருள். மோக்ஷோபாயம் எது என்றால் ப்ரபத்தி என்றதாயிற்று. இதற்குமேல் "சரணாகதியென்னும் சார்வுடன் மற்றொன்றை அரணாகக் கொள்ளலாகாது என்றதத்தனை" என்று சேர்ப்பது அபத்தம். எந்த வாக்யத்திலிருந்து என்ன பொருள் கிடைக்குமென்பதை உணராச் சக்தியிராமையால் சொன்னது இது. ப்ரபத்தி உபாயமா அன்றா என்ற கேள்வி இராதாப்போலே ப்ரபத்தியோடு மற்றொன்றையும் அரணாகக் கொள்ளலாமா கூடாதா என்ற கேள்வியும் இங்கு இல்லை.

.14) இப்படி ஸாரமாக விஷயங்களை யெடுத்துச் சொல்ல வேண்டியதைச் சொன்னோம். இங்கு ப்ரதானமாய் கவனிக்கவேண்டிய விஷயமென்ன வென்றால் ப்ரபத்தியை அநுஷ்டிக்க வேண்டிய விஷயத்தில் பூர்வாசார்யர்களுக்குள் ஒருவருக்கும் விப்ரதிபத்தி லவலேசமுமில்லை. "ஸ்வீகார மில்லாதபோதும் ஸித்தோபாயம் தானே பலங்கொடுக்க வல்லதாகையால் ஸ்வீகாரம் உபாயமென்ன வேண்டியதில்லை. ஆகிலும் வைஷம்யாதி பரிஹாரத்திற்காக ஸ்வீகாரமிராதபோது பலம் கொடுப்பதில்லையாகையால் ஸ்வீகாரம் அவச்யாபேக்ஷிதம். இதைத் தானே செய்யாமல் ஆசார்யாதீநமாகவிட்டு ஆசார்ய ஸம்பந்தத்தையே உபாயமாகப் பற்றுமவர்களுக்கு அந்த ஸ்வீகாரந்தானுமநபேக்ஷிதம்" என்றவிது பிள்ளைலோகாசார்யருடைய மதம்.

ஸம்ஸார பீதியாலே ப்ரபத்தியை அநுஷ்டிப்பது; நியதஸ்ம்ருதி [illegible] என்று உடனே அநுசயிப்பது. இது மாறி மாறி மோக்ஷ ப்ராப்தி வரையில் நடந்துகொண்டேயிருக்கும். அதிகார ஸித்திக்காக ப்ரபதநம் அநுஷ்டிக்கவேணுமென்பது பெரிய வாச்சான் பிள்ளையின் மதம்.

ப்ரபத்தி பக்தியைப்போல் உபாயமே. ஆனால் ஸாத்விகத்யாகரீதியில் உபாயத்வ புத்தியை விட்டு எம்பெருமானிடத்திலேயே அதைச் செய்யவேணும். சாஸ்த்ரவிஹிதமான இத்தை அநுஷ்டித்து க்ருதக்ருத்யராகையொழிய அநுசயத்திற்கு ப்ரஸக்தியில்லை என்பது தேசிகனுடைய ஸித்தாந்தம்.

பூர்வாசார்யர்களுடைய நிஷ்கர்ஷம் இப்படியிருக்க இவர்கள் இத்தனை காலம் கோஷித்துவந்த அநுபாயத்வாநுஷ்டேயத்வபக்ஷங்களைக் கைவிட்டு இந்தப் புதிய புஸ்தகத்தில் புதிதாகச் சொல்வது என்னவெனில் "மந்தாதிகாரிகள் மோக்ஷத்திற்காக ப்ரபத்தி பண்ணுவதில் எங்களுக்கு ஆக்ஷேபமில்லை. உத்தமாதிகாரிகளான நாங்கள் ஸ்வயம் ப்ரயோஜநமாக, போக்யமாக, அதை அநுஷ்டிக்கிறோம்" என்பது. இப்படி ஸ்வயம்பிரயோஜநமாக அநுஷ்டிப்பது என்றால் என்ன? ஸங்கல்பம் உண்டா? இருந்தால் எப்படிப்பட்டது? நிரபேக்ஷோபாயத்வம் வேத்யாகாரமாயிற்றே. அந்த உபாயத்வம் இந்நிரூபிதம் இத்யாதிகளை உபபாதித்து இப்படிச் செய்கிறோமென்று நிரூபிக்க வேண்டியது இவர்கள் கடமை.

[illegible]
न शक्यते [illegible] ।
[illegible]
[illegible] भविष्यति ॥

[illegible] ॥

என்ற ஸ்ரீஸூக்திக்கு ஒரு விசித்ரார்த்தம் கண்டுபிடித்து ஏதோ உத்தமாதிகாரி பதவியிலிருக்கப் பார்க்கின்றார்கள். பகவானுடைய உபாயத்வ த்யாகத்தைக் காட்டிலும் இன்னும் மேல் பர்வாவான ஸத்தாத்யாகத்தையே செய்து உத்தமோத்தமாதிகாரிகளாக ஆகாமலிருக்க வேண்டுமே இவர்களென்று இவர்களுக்கு ஆப்தராக சிலருளரேல்

ப்ரபத்தேர்ஹேதுக்தி தாத்பர்யம் ஶ்ரூயதாம் |

ஶாஸ்த்ரஸித்தோபாயத்வம் ப்ரபத்த்யாதே: ப்ரதிஷ்டிதம் |
த்யாஜ்யா தத்ர ஶ்ருதிஸ்தத்ர ஸாத்விகத்யாகஶீதித: ||

அத்வேஷவ்யாஜமாத்ரத்வாதநுபாயத்வவாதிந: |
ஸந்தி கேசிந்ந கேசிச்ச ஸந்த்யநநுஷ்டாநவாதிந: ||

ந கிஞ்சிதந்யதா வக்தும் யை: கைஶ்சிதிஹ ஶக்யதே |
இதி தத்த்வமிதம் ஜ்ஞாத்வா ஶநை: ஶரணமிஷ்யதாம் ||

26—11—51ல் வெளிவந்த
ப்ரபத்த்யுபாயத்வ சோதநத்திற்கு
ப்ரதிவசநம் முற்றிற்று.

ராஜஸேவாநுஸாரிண ஏவம் வதந்தி — ஸ்வாமேவ தாவத் கிம நிரஞ்ஜநவிஜ்ஞாநவ்யாஜநிர்விஜ்ஞநிரபேக்ஷநிஜஸ்வபாவதயா அதிமாத்ரஸந்தப்தசித்தா ஸதபூர்வஸ்யாஸ்ய ப்ரணிபத்ய தீநதீநா ப்ரஹாண—

ப்ரஹ்ம விஜ்ஞாபயாமி த்வாம் ஸ்வாமிகாருண்யஹாஸயா |
அஜ்ஞஸ்ய ஜந்தோர்வா ஶம்யாதந்யா வாஸ்தே ஸாக்ஷிதீ ||

அநுபந்தம் 2.

ஓடும் புள்ளேறி.

1) நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழியில் முதல் பத்தில் எட்டாவது பதிகம் இது. இதற்கு ப்ரதிபாத்யமான வர்த்தம் வாத்ஸல்யமென்று திருக்குருகைப் பிரான் பிள்ளான் ஆருயிரப்படியில் இப்பதிகத்தின் கடைசி பாட்டின் கீழ் அருளிச் செய்திருக்கிறார்.

> அதி சீதளமாய் ஸர்வபோக்யமான திருநிறத்தை யுடையனுயிருந்த எம்பெருமானுடைய **ஆச்ரிதவாத்ஸல்யமாகிற** மஹா குணத்தை யுள்ளபடியே பேசிற்று **இத் திருவாய்மொழி** என்கிறார்

என்பது அங்குள்ள ஸ்ரீஸூக்தி. 'இத்திருவாய்மொழி வாத்ஸல்யமாகிற மஹா குணத்தைப் பேசிற்று' என்று ஸ்பஷ்டமாய் சிறிதும் ஸந்தேஹத்திற்கு இடமில்லாதபடி இவ் விஷயம் சொல்லப்பட்டிருக்கிறது. திருவாய்மொழியின் ஆரம்பத்தில்

> (ஓடும் புள்). இப்படி தம்மோடு கலந்தருளின வெம்பெருமானுடைய திவ்யைச்வர்யம் சொல்லுகிறது.

என்றிருப்பதைப் பார்த்து மேலுள்ளதைப் பராமர்சியாதே, இங்கும் 'இத்திருவாய்மொழி சொல்லுகிறது' என்றிப்படி ஸ்ரீஸூக்தி இல்லை என்பதை ஆலோசிக்காதே '[illegible]' என்ற

ரீதியிலே அந்யதாவாக க்ரஹித்து ஐச்வர்யம் இத்திருவாய் மொழியின் அர்த்தமென்று பிள்ளான் அருளிச்செய்ததாகச் சொல்வர்கள்.

> அதில் முதல் பாட்டு திருநாட்டில் ஐச்வர்யம் சொல்லுகிறது.
>
> **(அம்மானுய்)** நித்யஸித்தமான அந்த ஐச்வர்யத்தின் மேலே அஸங்க்யேய திவ்யாவதார ரூபமான நிரவதிகைச்வர்யத்தை யுடையவனென்கிறுர்.
>
> **(கண்ணுவான்)** அந்த ஐச்வர்யத்தின் மேலே ... ... திருமலையிலே நிற்கையாகிற மஹா ஸம்பத்தையுடையனுயிருக்குமென்கிறுர்.

என்றிப்படி மூன்று பாட்டுக்களுக்கு ஐச்வர்யம் ப்ரதிபாத்யமென்று காட்டி

> **(வெற்பை)** ஏவம் விதமான ஐச்வர்ய பரம்பரைகளை யுடைய வெம்பெருமான் தன்னுடைய காருண்யாதி கல்யாணகுணங்களைக் காட்டியருள ... ... ஸர்வகால முமந்த குணங்களைக் கற்கப் பெற்றேனென்கிறுர்

என்று நாலாம்பாட்டில் ஐச்வர்ய ப்ரதிபாதநம் முடிந்ததாக வைத்து எம்பெருமான் செய்தருளிய உபகார விசேஷத்தை ப்ரஸ்தாவிக்கையாலே திருவாய்மொழி முழுவதுக்கும் ஐச்வர்யம் ப்ரதிபாத்யமென்று பிள்ளான் கருதவில்லையென்பது ஸ்பஷ்டம். ஸாக்ஷாத் ஸ்வாமியும் இத்தையெல்லாம் உபபாதித்தருளியிருக்கின்றுர். **(ஓடும்புள்)** என்றிப்படி ப்ரதிகமெடுத்து 'திவ்யைச்வர்யஞ் சொல்லுகிறது' என்ற

வித்தால் ஆபாதமாய் இத்திருவாய்மொழி முழுவதும் ஐச்வர்யத்தைச் சொல்லுகிறது என்று தோற்றலாம். ஆனல் மேலுள்ளவற்றை யெல்லாம் பராமர்சிக்கும்போது இது இப்படியன்று என்று தெரிகின்றமையால் "ஆரம்பத்தில் சில பாட்டுக்களில் சொல்லுகிறது" என்று இங்கு பொருளாதல் நிச்சயிக்கப்படுகின்றது.

2) "தேசிகன் பிள்ளானைத் திரஸ்கரித்தாரென்று ஒருவருமெழுதியிருக்கவில்லை" என்கிருர்கள்.

நாம் இந்த விஷயங்களை ஆறு வருஷங்களுக்கு முன் தேசிக ப்ரபந்தவுரையாராய்ச்சியில் செய்த தூஷணங்களுக்கு ஸமாதானமாக எழுதினேம். அதிலிருந்தே எடுத்து இந்த ஒரு விஷயத்தையே உத்யாந பத்ரிகையின் ஒரு ஸஞ்சிகையில் ப்ரகாசப்படுத்தினேம். காலக்ரமத்தில் வரிசையாக மற்றவைகளையும் ப்ரசுரிக்க உத்தேசித்திருந்தது.

ஆராய்ச்சியில் இவர்கள் "பிள்ளான் வழியைப் புறக்கணித்தாகிலும்" என்றும் "பிள்ளானுடைய ஆருயிரப்படியை உபேக்ஷித்தன்றே" என்றும் எழுதியிருக்கின்றுர்கள்.

'பிள்ளான் வழியைப் புறக்கணித்து' என்றேமேயன்றி 'பிள்ளானைத் திரஸ்கரித்து' எனவில்லை யென்கிருர்கள் போலும்.

3) "ஆர்ஜவம் இத் திருவாய்மொழியினர்த்தம்" என்கிற பட்டர் திருவுள்ளம் நம்பிள்ளை முதலானேர்க்கு எந்த விதமாகத் தெரிந்ததோ அந்தவிதமாகவே அது மற்றேர்க்கும் தெரியுமாதலால் இந்த விஷயத்தில் பெரியவாச்சான்பிள்ளை

ப்ரப்ருதிகளுடைய வ்யாக்யாநத்தையே உபஜீவிக்க வேணு மென்ற நிர்பந்தமில்லையென்று முன்பே சொன்னோம். ஆகையால் "தேசிகன் பிள்ளானுடைய வ்யாக்யானத்தின் வழியே செல்லாமல் நம்பிள்ளை திருவடிகள்போல் பட்டர் திருவடிகளின் வ்யாக்யான வழியில் சென்றிருக்கிறார்" என்பது இங்கு பக்ஷபாதமில்லாதவர்கள் சொல்லக்கூடிய வார்த்தை.

ஆனால் இதுவே யன்று நாம் கருதியது.

4) உஶகாமெ௫ாயதூவி ஷூஜுவமேவ ஸ்யாத், தயாவி என்றோம் நாம். "இந்த ஸம்ஸ்க்ருத வாக்யத்தினால் இந்த ஓடும் புள்ளேறி தசகத்திற்கு ஆர்ஜவந்தான் ப்ரமேய மென்று தேசிகன் திருவுள்ளம் பற்றிவிட்டார். அதில் விவாதப்பட ந்யாயமில்லை" என்று நாம் சொல்வதாக இவர்கள் அநுவதிக்கிறார்கள். யதூவி தயாவி இருக்குமிடத்தில் எல்லாம் 'விவாதப்பட ந்யாயமில்லை' என்று பொருள் கிடைக்குமென்று இவர்கள் எங்குக் கற்றார்கள் என்று தெரிய வேணும். 'ஷொஷொ யதூவி தஸ்ய ஸ்யாத்' என்றவிதற்கு தோஷமிருக்கிறபடியினாலேயே என்று பொருள் கொள்ளுமிவர்கள் இங்கு இப்படிச் சொல்வதில் ஆச்சர்யமொன்றுமில்லை. ஆனால் வித்வான்கள் சிரிப்பார்களே என்று சிறிது ஸங்கோசப்படுவது ச்ரேஸ்யகாமர்களுக்கு அவச்யாபேக்ஷிதம்.

பிள்ளான் ஒரு த்ருஷ்டியினால் வாத்ஸல்யம் ப்ரதிபாத்ய மென்கிறார். பட்டர் இன்னொரு த்ருஷ்டியினால் ஆர்ஜவ மென்கிறார். இவ்விரண்டில் ஒன்றை [illegible]ஷித்து மற்றொன்

றை பெரியவாச்சான்பிள்ளை முதலானோர் கொண்டார்கள். தேசிகன் திருவுள்ளம் என்னவென்பது ஸ்பஷ்டமாய்த் தெரியவில்லை. அதனாலேயே ஸாக்ஷாத் ஸ்வாமி நீர்புரை வண்ணன் சீர் என்றவிடத்தில் 'ஆர்ஜவகுணத்தை, வாத்ஸல்யத்தையென்னவுமாம்' என்று பதார்த்த விவரணம் செய்தருளுகிறார். இதெல்லாம் நிகமபரிமளம் இன்றளவும் இருந்திருக்குமாகில் வ்யக்தமாம்.

ஆர்ஜவதாம் ஆஹ என்றும் ஸா(ஸ்வா)ர்ஜவகுணம் என்றும் ஸ்பஷ்டமாய் தேசிகன் ஸாதித்திருக்க அவர் திருவுள்ளம் என்னவென்று தெரியவில்லையென்பது ஏனெனில் இதைச் சுருக்கமாக ஸூசிப்பித்தோம்.

> 𑌅𑌤 𑌏𑌵 𑌆𑌰𑍍𑌜𑌵𑌤𑌾𑌦𑍀𑌤𑌿 𑌅𑌪𑍇𑌕𑍍𑌷𑌂 𑌉𑌪𑌕𑌾𑌰𑌕𑌂
> '𑌨𑍀𑌰𑌵𑌰𑍍𑌣𑌃' 𑌇𑌤𑌿 𑌦𑍍𑌰𑌾𑌵𑌿𑌡𑌶𑌬𑍍𑌦𑌸𑍍𑌯 𑌭𑌾𑌵𑌾-
> 𑌰𑍍𑌥𑌾𑌨𑍁𑌵𑌾𑌦𑌨𑌂 𑌚 𑌸𑌹 𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑌂 𑌹𑌿 ।

என்றவித்தால் நீர்...வண்ணன் என்று மூலத்திலுள்ளதை அப்படியே ஸம்ஸ்க்ருதமாக்கி நீரவர்ண என்று ப்ரயோகித்த தேசிகன் பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானத்தையநுஸரித்து நீரதுல்ய, நீரஸமான என்றிப்படி ப்ரயோகிக்க ப்ராப்தமானதை வேணுமென்றே தாம் உபேக்ஷிப்பதாகவும் அதற்குக் காரணம் அதில் கூறப்பட்டபொருளில் உள்ள அநுபபத்தியே என்பதாகவும் ஸூசிப்பிக்கின்றார். இப்படி ஒரு விஷயத்தில் அநுபபத்தி ஸூசநதாத்பர்யமுள்ளபோது வாக்யத்திற்கு மற்றொரு விஷயத்தில் தாத்பர்யம் கொள்ள முடியாதாகையால் ஆர்ஜவகுணத்தை இத்திரு

வாய்மொழி ப்ரதிபாதிக்கின்றது என்பதில் நோக்கில்லை என்பது தோன்றுகின்றது. இதனால் அது 'க்ருத்வா சிந்தை' அல்லது 'அப்யுபேத்யவாதம்' என்ற ரீதியில் சொல்லப்பட்டது என்பது பெறப்படுகின்றது. இத்தை யதூ௵வி தயாவி என்று இப்பதங்களை ப்ரயோகித்து ஜ்ஞாபித்திருக்கின்றோம். இதற்கு நேர் விபரீதமாக 'விவாதப்பட ந்யாயமில்லை' என்று இவர்கள் நம் வாக்யத்திற்கு வ்யாக்யானம் செய்வது அஜ்ஞானம் அல்லது வெறும் வஞ்சனை.

> ஆர்ஜவகுணம் ப்ரதிபாத்யமென்றே வைத்துக்கொள்வோம். ஆகிலும் நீர்புரைவண்ணன் என்பதற்கு பெரியவாச்சான்பிள்ளை செய்த விவரணம் யுக்தமன்று என்று தேசிகன் கருதுகின்றார்

என்பது நம்முடைய ஸம்ஸ்க்ருத வாக்யத்தின் பொருள்.

5) இதற்குமேல் "நீர்புரைவண்ணன் என்ற சொல்லுக்கு மாத்திரமே யன்று, அந்தப் பாசுரம் முழுமைக்குமே பெரியவாச்சான்பிள்ளை பணித்தபொருள் அபத்தமாயிருக்கட்டுமே. அதைப்பற்றி இங்கென்ன ? ஒன்றுக்கொன்று ஸம்பந்தமில்லாத பேச்சன்றோ இது" என்கின்றார்கள். வெகு நெருங்கிய ஸம்பந்தமுள்ள பேச்சு இது. கேண்மின். பட்டர் ஆர்ஜவம் இங்கு ப்ரதிபாத்யமென்றார். ஆர்ஜவமாவது பரச்சந்தாநுவர்த்தித்வம். பிறருடைய விருப்பப்படி வர்த்திக்கும் தன்மை. கீழ் பள்ளமாகத் தோண்டினால் அங்கும் நீர் பாயும். ஏற்றம் வைத்து இறைத்தால் மேட்டிலும் ஏறும். இந்த ஸ்வபாவம் பகவானுக்கும் உண்டு. யெயயா ஊ௦ ஓவஶ௵ஜ । இதை நஞ்சீயர்

உபாயஜ்ஞர்க்கு நினைத்தவிடத்திலே கொடுபோக
லான நீரின் தன்மையையுடையவனுடைய குணத்தை

என்று நிஸ்ஸந்தேகமாக ப்ரதிபாதிக்கிறார். உபாயஜ்ஞர் நீரை நினைத்தவிடத்திற்குக் கொண்டுபோகலாம். அப்படியே உபாயஞ்ஜர் பகவானை நினைத்தபடிப்பெற்று மகிழலாம் என்றதாயிற்று. பட்டர் கொண்ட ஆர்ஜவகுணத்தின் ஸ்வரூபம் இப்படியிருக்க இதை உள்ளபடி க்ரஹித்தோ க்ரஹியாமலோ பெரியவாச்சான்பிள்ளை வேறென்று கூறுகின்றார். தன்னைப்பற்றிய நினைவேயிராமல் இந்த்ரிய பரவசர்களாய் சேதநர்கள் ஸ்வச்சந்த வ்ருத்திகளாயிருக்க எம்பெருமான் தன் ஸ்வரூபஸ்வபாவாதிகளை தததநுரூபமாக்கிக்கொண்டு அவர்கள் போனவழியே போகிறான். இது ஆர்ஜவகுணமென்கிறார் இவர். ஆச்ரிதர்கள் தன்னை எப்படிப் பெற விரும்புகிறார்களோ அப்படித் தன்னைச் செய்துகொடுக்கிறான் எம்பெருமான் என்கிறார் பட்டர். லௌகிகார்த்த ப்ரவணர்கள் போன வழியே தனக்கு வழியாகக் கொள்ளுகிறான் எம்பெருமான் என்கிறார் பெரியவாச்சான்பிள்ளை. பரச்சந்தம் என்றவிதில் சந்தம் அதாவது விருப்பம் எம்பெருமானைப் பற்றியது என்று பட்டர் கொள்கின்றார். லௌகிகார்த்தங்களைப் பற்றியது என்று பெரியவாச்சான்பிள்ளை கருதுகின்றார். இதை இவர் நீர்புரைவண்ணன் என்றவிதற்கு விவரணம் பண்ணுமிடத்தில் காட்டினார். இந்த விவரணம் யுக்தமன்றென்றும் அதனால் இத்திருவாய்மொழிக்கு ஆர்ஜவம் ப்ரதிபாத்யமென்ற பக்ஷத்திலும் இந்த ஆர்ஜவம் இவர் விவரித்தபடியன்றென்றும் தேசிகன் 'நீரவணை' என்றவிதனால் ஸூசிப்பிக்கின்றாரென்றதா

யிற்று. ஆகவே நாம் சொன்னது ஸுஸங்கதமென்று காண்க.

6) "வண்ணம் என்கிற சொல்லுக்கும் அதற்கு மூல பூதமான வர்ணம் என்கிற வடசொல்லுக்கும் நிறம், தன்மை என்று இரண்டு பொருள்களுண்டு" என்று சொல்லிக் கொண்டே நீரவர்ண: நீரஸவர்ண: நீரதுல்ய: (நீரசீல:) என்கிற விவையெல்லாம் பர்யாயங்களே என்கிறார்கள். **நீர வர்ண:** நீரின் நிறத்தையுடையவன்; அல்லது அதன் தன்மையையுடையவன். • **நீரதுல்ய:** நீர்போன்றவன். **நீரசீல:** நீரின் தன்மையையுடையவன் என்று வெவ்வேறு பொருள்களைக் குறிக்கும் சொற்கள் இவை. பர்யாயங்களாவது எப்படி? **மணிவண்ணன் அஞ்ஜநவண்ணன்** இத்யாதிகளில் மணி துல்யன் என்று ஸாத்ருச்ய மாத்ரத்தையோ மணிசீலன் என்றும் அஞ்ஜநசீலனென்றும் தன்மையையோ கொள்ளத் தகுமா?

கோ (கௌ) என்னும் வடசொல்லுக்கு கிரணம் முதலிய பல அர்த்தாந்தரங்கள் உள. ஆயினும் முதல் ப்ரதீதி பசுவுக்கே. அதேபோல் வர்ணம் என்பதற்கு ப்ரதம ப்ரதிபாத்யார்த்தம் நிறமே. இதுதான் இங்கு பிள்ளான் பணித்த பொருள். இதை நாம் எடுத்துக்காட்டிய பிறகும்

> பிள்ளானுட்பட ஸகலாசார்யர்களும் தன்மைப் பொருளைக்கொண்டு

என்றது எப்படி? ஏன்? ஆகவே நீரவர்ணா என்பதற்கு நீரின் நிறத்தையுடையவன் என்றுதான் பொருள்படும். பிள்ளான் ஸாதித்த இப்பொருள்விட்டு பெரியவாச்சான்

பிள்ளை ஸாதித்த பொருளைக் கொண்டிருந்தால் விசிஷ்டி தன்மையைக் குறித்து நீரசீலே என்ருவது, பொதுவாய் நீர துல்யே என்ருவது, நீர் உவமையையே விட்டுவிட்டு தேவ தேவே, லோகநாதே என்றிப்படியாவது தேசிகன் ஸாதித்திருக்கவேண்டியது அவச்யம். ஜை॰ தா॰ ஜமாஉ என்ற வித்தாலேயே நீர்புரைவண்ணன் என்பதற்கு பெரியவாச்சான்பிள்ளை செய்தருளிய விவரணம் ஸமஞ்ஜஸமென்று தோற்றுமாகையால் நீரதுல்யே நீரசீலே இத்யாதிகளுக்கு அபேக்ஷை ஸர்வதா கிடையாது. ஆகையால் நீரவணே என்று ஸாதித்தது பிள்ளானருளிச்செய்த வர்த்தத்தை ஸ்மரிப்பித்து வ்யாக்யாநாந்தராநப்யுபகமத்தைக் காட்டுகின்றது என்பது அவிசால்யம்.

தேவதேவே லோகநாதே என்றிப்படி ஸாதிக்கவில்லையே என்று நாம் சொன்னதில் ஏதோ அநௌசித்யமிருப்பதாக ப்ரமிக்கின்ருர்கள், ஜை॰ தா॰ ஜமாஉ என்றவித்தால் ஆர்ஜவகுணம் திருவாய்மொழிக்கு ப்ரதான ப்ரதிபாத்யமென்று ஸ்பஷ்டமாய்ச் சொன்னபிறகு அதற்கு உபஸர்ஜநமாய் தேவதேவே என்று ஐச்வர்யத்தைச் சொல்வது

> மேட்டிலே நீரை வருந்தி யேற்றுமா போலே தன் ஸ்வரூப ரூபகுண சேஷ்டிதங்களை ஸங்கோசித்துத் தன்னை அவர்களுக்குப் பாங்காக நியமித்து

என்று அவதாரிகையில் சொன்ன ஸங்கோசத்திற்கு விஷயமாய் அநுகுணமாயிருக்குமாகையால் அஸங்கதி ஒன்றுமில்லை. ப்ராதிகூல்ய ப்ரஸக்தி எது? தரித்ரனுடைய ஆர்ஜவம் ச்லாக்யகுணமன்றே. ஐச்வர்யமுள்ளவனுடைய ஆர்ஜவமே யன்ருே மஹாகுணம்.

7) 'பிள்ளான் ஒருவகையான தன்மையை விவக்ஷித்தார்' என்பதேன் ? நிறம் தவிர வேறு குணத்தை விவக்ஷிக்கும் போது பொதுவாகத் தன்மை என்று பொருள்கொண்டு அத்தன்மை எது என்றால் ரங்கராமானுஜஸ்வாமி ஸாதித்தபடி தயாசிசிரத்வம் அல்லது வேறொரு குணமென்ன வேணும். விசேஷித்து நிறமே ஒரு பொருளாயிருக்க அதை ஸ்பஷ்டமாய் பிள்ளான் ஸாதித்திருக்க இவர் ஒரு வகையான தன்மையை விவக்ஷித்தார், அத்தன்மை நிறமென்பது ஸ்வஹ்ருதயவிஸம்வாதி யென்பதில் ஐயமில்லை. [illegible] । எம்பெருமானுடைய திவ்ய சேஷ்டிதங்களாலே அழகியது திருமலை என்றார் ஒருவர். 'மந்திபாய்' என்றபடி வாநர விஹாரங்களாலே அழகியது என்றார், மற்றொருவர். இருவரும் வாநரமென்றே பொருள் கொண்டார்கள். ஒருவர் அபர்யவஸாந வ்ருத்தியால் அந்தர்யாமியான எம்பெருமான் பர்யந்தம் கொண்டார். மற்றவர் யதாச்ருதமாகவே கொண்டார் என்பாருண்டோ ?

• [illegible] ।

8) நீர்புரைவண்ணன் என்றவிடத்தில் நீர் உபமானம். எம்பெருமான் உபமேயம். தான் தன்னை செவ்வியதாக்கிக் கொள்வது ஸாதாரண தர்மமெனவேண்டும். நீர் தானே மேட்டில் செல்லாதாகையால் இந்த ஸாதாரண தர்மம் அதனிடத்திராமையாலே இந்த உவமை சேராதென்றோம். இதற்கு ஏதோ ஸமாதானம் சொல்வதாக ஸம்ப்ரமித்து மாஞ்சோலை பூஞ்சோலை இத்யாதி என்னென்னவோ சுற்றிச் சுற்றி தமக்கே புரியாமல் சொல்லுகிறார்கள். இங்கு உண்மையென்னவெனில் ஸூத்ராக்ஷராணி வ்யாக்க்யாஸ்

யந்தே என்று பாஷ்யகாரர் அவலம்பித்த மார்க்கத்தை விட்டு யதா வாயஸேப்ய: ஸர்வேஷாம் ஸர்வாங்காநாம் ததா வயம் ரக்ஷயிஷ்யாம: என்று பிறர் காட்டின வழியிலே சென்று நஞ்சீயர் வரையில் ஏகரூபமாய் வந்த சாஸ்த்ரார்த்தத்தை உபேக்ஷித்துத் தாம் ஒருவிதமாக சிக்ஷித்து ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளிலும் அதைப் புகுத்தக் கங்கணம் கட்டிக்கொண்டுவிட்டார் பெரியவாச்சான்பிள்ளை.

நீரின் தன்மையையுடையவன் எம்பெருமான் என்றவிடத்தில் "நீரை ததபேக்ஷிகள் தகுந்த உபாயத்தினால் நினைத்தவிடத்தில் கொண்டுபோகலாம். அவ்வாறு எம்பெருமானையும் ததபேக்ஷிகள் தகுந்த உபாயத்தினால் நினைத்தபடிப் பெறலாம்'' என்றிவ்வளவே ஸமஞ்ஜஸமும் விவக்ஷிதமுமான பொருள். இவ்வளவேதான் நஞ்சீயரும் ப்ரதிபாதித்திருக்கின்றார். இதில் பகவத்ப்ராப்த்யர்த்தம் சேதனனுக்கு ஸ்வவ்யாபாரமொன்று அபேக்ஷிதமென்று ஏற்படுகிறது. இது பெரியவாச்சான்பிள்ளைக்கு ஸம்மதமல்ல. ஆகையால் 'ஈச்வரன் தானே தன்னைத் தாழ்த்திக்கொண்டு சேதநர் விலகிப்போன வழியே போகிறான்' என்கிறார். உபமேயத்தை இப்படிக் கொண்டால் உபமானமான நீருக்கு இந்த ஸ்வபாவமில்லாமையால் அநுபபத்திவர "நீரைவருந்தி மேட்டிலே ஏற்றினார் போலே" என்று அங்கும் மேட்டிலே ஏற்றும் புருஷரைக் கல்பித்தார். ஆகவே ஆழ்வார் ஸாதித்தது ஒன்று இவர் ஸாதிப்பது ஒன்று என்ற நிலை உண்டாயிற்று. நீர்போன்றவர் பெருமாள் என்கிறார் ஆழ்வார். நீரை மேட்டிலே ஏற்றுவார் போன்றவர் என்கிறார் இவர். இப்படி மூலத்திற்கும் வ்யாக்யாநத்திற்கும் ஸம்பந்தமேயில்லை என்று முடிந்தது. நஞ்சீயர் வ்யாக்யானத்திற்கு விருத்த

றிது என்பது இன்னொரு விசேஷம். தன்னைத் தாழ்த்திக் கொள்வதையும் பிறர் விருப்பமின்றிக்கே தன் விருப்பத்தினாலேயே எம்பெருமான் செய்கிறுனதலால் ஸ்வச்சந்தானுவர்த்தித்வமே உள்ளது. பட்டர் திருவுள்ளம் பற்றி ஸாதித்ததாகக் கொண்டாடப்படும் பரச்சந்தானுவர்த்தித்வமாகிற ஆர்ஜவகுணத்திற்கு ஜலாஞ்ஜலியே என்பதுமொன்று. அதவா கீழ்ச்சொன்னபடி இவருக்கு ஸம்மதமான பரச்சந்தானுவர்த்தித்வம் வேறென்ன வேண்டும்?.

நீர் தானுக மேட்டிலே ஏறுது. மற்றொருவர் ஏற்றினுல் தான் ஏறும். அப்படியன்று பகவான். தானே தன்னைத் தக்கபடி செய்துகொள்வான் என்று வைதர்ம்யத்ருஷ்டாந்தமாவதற்கே இவர்கள் கருத்தின்படி நீர் உரியதாகும்.

9) இனி அத்யதனர்கள் இந்த உவமையை நிர்வஹிக்கும் அதவா நாசமாக்கும் ப்ரகாரத்தைப் பார்ப்போம்.

> உதவிகொள்ளவேண்டியதான சோலை தோட்டம் முதலான பொருள்கள் நீருக்காகத் தாம் பணிந்து நிற்காவிட்டாலும் நீரானது தான் பணிந்து நின்று உதவி செய்கிறது. இது போல் உதவிகொள்ள வேண்டியவர்களான ஸம்ஸாரிகள் தாழ்ந்து பணிந்து காட்டாவிட்டாலும் எம்பெருமான் தான் தன்னைத் தாழவிட்டு அவர்கள் போம்வழியே போய் அவர்களுக்கு உதவி புரிகிறுன்......என்று சொல்லிற்றுயிற்று

என்கிறுர்கள்.

ஶுஶ்ரூஷாம் ருஜுதாம் வாவாஸம் கோ வேதிதும் ஹதி । இப்படிச் சொல்லுமிவர்கள் பூர்வ க்ரந்தங்களெல்லாம் அநுபபந்நங்களென்றே ஒப்புக்கொண்டதாக ஆயிற்று. 'உபாயஜ்ஞர்க்கு நினைத்தவிடமெல்லாம் கொடு

போகலான' என்று நஞ்சீயர் நீரைக் கொண்டுபோகப்படும் பொருளாக அதாவது கர்மகாரகமாக வைத்திருக்கின்றார். இவர்கள் 'உதவிசெய்கின்றது' என்று கர்த்ருகாரகமாக்கு கின்றார்கள். ஆகையால் நஞ்சீயர் புறக்கணிக்கப்பட்டார். 'மேட்டிலே நீரை வருந்தியேற்றுமா போலே தன் ஸ்வரூப ரூபகுணசேஷ்டிதங்களை ஸங்கோசித்துத் தன்னை அவர்களுக்குப் பாங்காக நியமித்து அவர்களோடே பரிமாறும்' என்று பெரியவாச்சான்பிள்ளையும் 'நீரேரு மேடுகளிலே விரகாலே நீரேற்றுவாரைப்போலே தன்னை அவர்களுக்கு ஈடாக அமைத்துப் பரிமாறும்' என்று ஈட்டுக்காரரும் எம்பெருமான் சேதநர்களுக்கீடாகத் தன்னை அமைத்துக் கொள்வதில் நீரை வருந்தி மேட்டிலே ஏற்றுவதை உபமானமாக ப்ரதிபாதித்திருக்க, இவர்கள் எம்பெருமான் சேதநர்களுக்கு உதவுவதில் நீர் பூஞ்சோலைக்கு உதவுவதை உபமானமாக்கியிருக்கின்றனர். ஆகவே இவ்யாக்யாதாக்களும் புறக்கணிக்கப்பட்டனர்.

இனி இவர்கள் சொல்வதில் உள்ள குற்றங்களாவன:

1) முன் க்ரந்தங்களில் ஸர்வதா இராத சோலை விஷயத்தைப் புதிதாகக் கொண்டுவருகின்றனர்.

2) ஒரு ப்ராணி, ஒரு முடவன், ஒரு சிறுவன், பிபாஸையால் பீடிக்கப்பட்டு ஜலாபேக்ஷை செய்து கிணற்றங்கரையிலிருக்க தயாளுவான ஒருவன் கிணற்று நீரை முகந்து கொடுத்து உதவலாமாதலின் அபேக்ஷை செய்யாத சோலையையே கொள்ளவேணுமென்பதற்கு ப்ரமாணமில்லை.

3) வாடி வதங்குகின்ற சோலை அதனாலேயே தன்னபேக்ஷையை ப்ரகாசப்படுத்துகின்றமையால் அது அபேக்ஷிக்கவில்லை என்பதுமில்லை.

4) "நீரானது தான் பணிந்து நின்று" என்பது பாதிதம். 'சேதநன் துவாரா' என்று விவக்ஷிதமென்னில் '**தான் தன்னைத்** தாழவிட்டு' என்று உபமேயத்திலுள்ளதற்கு இது சேராது.

ஈவஷி தவட நாவடீயவொz
வ்யஸாகூஊாசது ஸசியநம வூஜொா:।

ஈவயீயதாం ஜொா: ... தேர்போல் இவன் அசைகிருன் என்கிரும். தேருக்கு அசைதல் ஸ்வாதீனமன்று. சேதநாதீநமே. சேதனன் ஸ்வயமே அசைகிருன். ஆகிலும் தேர்போல் இவன் அசைகிருன் என்றவிதில் அநுபபத்திலவலேசமுமில்லை. 'தேர் தானே அசைகின்றது போல்' என்ருல் அது அநுபபந்நம். பாதிதம். ப்ரக்ருதத்திலுமப்படியே. 'தான்' என்பதைவிட்டு நீர் சோலைக்கு உதவுவதுபோல் எம்பெருமான் சேதநர்க்கு உதவுகின்ருன் என்ருல் அது யுக்தம். தானே உதவுவதுபோல் என்ருல் அது யுக்தமன்று. நீர் தானே பூஞ்சோலைக்கு உதவுவதுபோல் ஈச்வரன் நமக்கு உதவுகிருன் என்ருல் அது எப்படி தானுக உதவுகிறதில்லையோ அப்படியே ஈச்வரனும் தானுக உதவமாட்டான்என்றே பொருள்படும். இவன் கரிபோல் ஜ்வலிக்கிருனென்ருல் ஜ்வலிக்கவில்லையென்றே பொருள். ப்ரஸித்தமான பொருளே எங்கும் உபமானமாகக் காட்டப்படுகின்றது. ஆகையால் அதற்கு எந்த ஸ்வபாவம் ப்ரஸித்தமோ அது தான் தோன்றுமே யன்றி நாமாக ஒன்றை அதில் கல்பிக்கமுடியாது. சோலையிருக்குமிடத்திற்கு நீர் போகிறது, நீர் இருக்குமிடத்திற்கு சோலை வருவதில்லை என்று விவக்ஷிதமென்னில் இதனுல் சேதநர் இருக்குமிடத்திற்கு எம்பெருமான் வருகிருன். எம்பெருமான் இருக்குமிடத்திற்கு அவர்கள் வருவதில்லை என்று கிடைக்கும். இது ஆர்ஜவமன்று. தான் தன்னை

மாற்றிக் கொள்கை இங்கு ஆர்ஜவமென்று விவக்ஷிதம். இது நீருபமையினுல் எவ்விதத்திலும் கிடைக்கமாட்டாது. ஸவம் ஷ—இங்கு 'தானே தன்னைப் பாங்காகச் செய்து கொண்டு' என்பது விவக்ஷிதமா அன்று? விவக்ஷிதமென்னில் நீர் உபமை ஸித்திக்க விரகில்லை. அன்றென்னில் ஆர்ஜவம் ஸித்திக்காது.

'உவமாஹஜுவஜெzவஸிரு நிரஹா வாதிஷஞிநஃ'
—என்பது ஸாரம்.

10) இவ்வளவால் ஆர்ஜவகுணம் இத்திருவாய்மொழிக்கு ப்ரதிபாத்யமென்று கொண்டபோதும் பெரியவாச்சான் பிள்ளை வ்யாக்யானித்த ரீதியில் அது ஸித்திக்க வழியில்லையென்று தேசிகன் ஜஜுதாம் நீரவணெடு என்ற விந்த இரண்டே பதங்களால் அதிநிபுணமாகவும் அதிவிசதமாகவும் அபேத்யமாகவும் வ்யஞ்ஜிப்பித்தருளியிருக்கின்ருர் என்பது ப்ரதிஷ்டிதம்.

11) இப்படி சாஸ்த்ரஸம்ப்ரதாய விருத்தமாகச் சொன்ன வர்த்தங்களை நிரஸிக்கவேண்டியும், அநுக்த அர்த்தவிசேஷங்களைப்ரதிபாதிக்கவும், நம்மாழ்வாரிடத்திலுள்ள ப்ரதிபத்தி விசேஷ ப்ரயுக்தமாகவும், ஸ்ரீபாஷ்யத்திற்கு ச்ருதப்ரகாசிகாதிகள் இருக்கச்செய்தேயும் தத்த்வடீகை செய்தருளினது போலவும் கத்யத்ரயம், ஸ்தோத்ரரத்நம், அமலனுதிபிரான் இவற்றுக்குப் பூர்வவ்யாக்யாநங்களிருக்க வ்யாக்யாந்தரமிட்டாப்போலவும் திருவாய்மொழிக்கு தேசிகன் ஒரு அத்புதமான வ்யாக்யாநம் பண்ணியிருக்கவேண்டியது அவச்யமென்பது வேறு ப்ரமாணமில்லாமலே புத்திமான்களுக்குத் தோன்றும். கிஞ்ச 'எழுபத்திநாலாயிரப்படியான நிகம பரிமளம் செய்தருளினர்' என்ற ஆப்தவாக்யமே இருக்கும்

போது. இத்தை அப்ரமாணமாக்க யார் சக்தர்? உந்மத்த வாக்யத்தை லோகம் பொருள்படுத்தாது.

12) "பிற்பட்ட ஆசாரியர் முற்பட்ட ஆசாரியருடைய ஸ்ரீஸூக்தியைத் தழுவி யெழுதிஞரென்ருல் இதற்கு ஏதுக்கு மறுப்பு?" என்று கேள்வி கேட்கின்றனர். இது ஸர்வ ஸாதாரண விஷயமாகையால் இப்படி தேசிகன் பெரியவாச்சான்பிள்ளையின் வியாக்கியாநத்தைத் தழுவி யெழுதிஞரென்று இவர்கள் ஏதுக்குச் சொல்லவேண்டுமென்ற கேள்விக்கு விடையிறுத்தால் இவர்கள் கேள்விக்குத் தானே விடை கிடைத்துவிடும். பெரியவாச்சான்பிள்ளை ப்ரபத்தியைப்பற்ற அநுசயத்தையும், க்ஷாமணத்தையும், அதிகாரி விசேஷணத்வத்தையும், பிராட்டியின் அநுபாயத்வத்தையும் ப்ரதிபாதித்திருப்பதை தேசிகன் நிரஸிக்கிருர் என்பது துரபலபம். ஆகவே ஸ்ரீ வைஷ்ணவர் என்பதற்குரிய ப்ரதிபத்தியைப் பண்ணச்செய்தேயும் தத்த்வஹித புருஷார்த்த விஷயங்களைப்பற்ற அவர் அந்யதா நிரூபணம் செய்தவிடங்களில் தேசிகன் யதோசிதம் விமர்சமும் வேறு நிஷ்கர்ஷமும் செய்கின்ருரென்பது துரபலபமாயிருக்க பெரியவாச்சான்பிள்ளை உபாத்யாயராயிருந்த பள்ளிக்கூடத்தில் தேசிகன் அக்ஷராப்யாஸம் பண்ணிஞர் என்று திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டுவந்தால் அவருக்குமுபாத்யாயர் இவர் என்ற உண்மையை எடுத்துக்காட்டாமல் எப்படி இருக்கமுடியும்?

ஸாம்ப்ரதாயிக꞉ கஶ்சித் ப⁴விஷ்யஸ் வாதாநு யதி ।
தே³ஶிகாதயிக꞉ கஶ்சித் ப⁴விஷ்யஸ் ததா² வாதி³ந꞉ ॥

13) ஶிஷ்டி விவாதஶீலாநாம் நிக்³ரஹயிதாம் க்ஷமா꞉ । என்று தர்ப்பன் பேசின கணக்கிலே உண்மையைப் பொய்யாக்கவும் பொய்யை உண்மையாக்கவும் தமக்கு

வன்மையிருப்பதாக நினைத்து தேசிக சரித்ரவிஷயமான ப்ராசீந நூல்களை அப்ரமாணமாக்க முயன்றும் புதிது புதிதாக எதையாவது சொல்லி பொய்க் கதைகளை ஸ்ருஷ்டித்து எழுதியும் வருகின்றார்கள். ப்ரக்ருதத்திலும் ரங்காஸ்யுதே என்ற பகவத்த்யான ஸோபாந ஸ்ரீஸூக்தியை எடுத்து

> தேசிகன் காலத்தில் ஸ்ரீரங்கத்தில் அசேஷசித்தரஞ்ஜகர்களாய்க்கொண்டு வாழ்ந்த ரஸிக வித்வான்கள் பெரியவாச்சான்பிள்ளை லோகாசார்யப்ரப்ருதிகளே யன்றோ? அவர்களைப் பணிந்து தாம் விமலமநஸ்கராகப் பெற்றதை யன்றோ பணிக்கிறார்

என்று, பாவம், ஏதோ பொருள்கூறி தேசிகனை சிஷ்யராகக் கொண்ட பெருமையைப் பெரியவாச்சான்பிள்ளை ப்ரப்ருதிகளுக்கு உண்டாக்க மனோரதிக்கிறார்கள். ஸம்ப்ரதாயப்படி ஐதிஹ்ய கல்பனையோடு நின்றிருந்தால் நாம் இதைப் பொருள்படுத்தவே அவச்யமில்லை. இதற்காகவும் ஒரு ஸ்ரீஸூக்தியை எடுத்து வதம் செய்தது அஸஹ்யமாயிருக்கின்றது.

> ஶீலாம்ஸா ஸாம்ராஜ்ய ஸூத்ர விமலமநா:

என்றதைக் காட்டி "ஆளவந்தார் பூர்வாவஸ்தையில் தமிழ்ப்ரபந்தங்களை மாத்திரம் கற்று ஸ்தோத்ரம் முதலானவற்றைச் செய்து போந்தார். பிறகு கர்மமீமாம்ஸை சங்கர பாஷ்யமாகிற வேதாந்தமீமாம்ஸை இவை இரண்டுங்கற்றுத் தெளிந்தார், விமலமநஸ்கரானார்" என்றார் ஓர் அத்வைதி. கிம் கவீநாம் கிம் ச ஜ்யோத்ஸ்நா ஸஜ்ஜநே ச வத வத பத: ? ரஞ்ஜிதாஶேஷ வித்வத்ரஞ்ஜிதம் ஸுஶேஷாணாம் ஜநாநாம் வித்வம் பதே ஸாஹஸ்ரே ரங்காஸ்யுதே। என்றிருக்கிறது. ஸ்ரீரங்க திவ்ய ஆஸ்தானம் எல்லோருடைய மநஸ்

ஸையும் களிப்புறச் செய்கிறது என்பது இதன் பொருள். இதைத் திரித்து 'அசேஷசித்தரஞ்ஜகர்களாய்க்கொண்டு வாழ்ந்த ரஸிக வித்வான்கள்' என்று இவர்கள் விவரிக்கின்றனர். எதற்காக இந்தக் கோணல்?

ரஜூாஸூாநெ என்றது எங்கே அந்வயிக்கிறது? இது ஒரு காரகம். வித்வத்ஸேவாவிமலமநஸா வெஹூ்டுஶெஉந என்பது ஒரு காரகம். இது கூஎரவு் என்பதில் அந்வயிக்கிறது. இதுபோலவே ரஜூாஸூாநெ் என்றதும் இந்தக்ரியையில் அந்வயிக்குமே தவிர இன்னொரு காரகத்தில் அந்வயிக்காது. 'மூ-ணா நா வ வராயகூாஉஸஂ஬ஂய: ஸஉஸ்வஷ ஸாஜ' என்ற ந்யாயப்படி. அதிலும் விஅஜ என்ற ஏக தேசத்தில் அந்வயிக்காது. வஉாய: வஉாயெநாநெதி என்றுள்ளது ந்யாயம்.

ஸ்ரீஉஹூாஂ ஸாஉஷாவிதி, ஸ்ரீ-ஷா ரா உா நஜாயாஜ ஸஉஸஉவி, ஹாஉா ஹாஜவஹூஸிஂஹாஸந, என்று அங்கங்கே ஸ்துதர்களான ஆசார்யர்களே 'வித்வத்ஸேவா' என்றவிடத்தில் வித்வான்களென நிர்த்தேசிக்கப்பட்டனர் என்ற உண்மை இவர்களுமறிந்ததே. ஆக்ரஹம் வேறு விதமாகப் பேசச் செய்கின்றது. விமலம் என்றதற்கு மலமிருந்து கழிந்ததுஎன்று இங்குபொருளன்று. உஜ்ஜ்வலம் என்று பொருள். ஊக்ஷூஉாவாயஶிக்ஷாஶதமணித உதெ: என்கிறவர் இவர். புண்டரீகதளாமலாயதேக்ஷண: என்றவிதில் கண்களில் மலமிருந்து கழிந்தது என்று பொருள் கூறுவதில்லை. மலம் இருந்து கழிந்தது என்றாலும் பக்தியோகத்திற்கு ப்ரதிபந்தகமான ரஜஸ்தமோமண நிவ்ருத்திவிவக்ஷிதை. க்லேசமில்லாமல் யோகிகளின் நிலையை யடைய விரும்புகிறவருக்கு அநுகூலமாக இந்த ஸ்தோத்ரம் செய்யப்பட்டது. வக்தாவுக்கு யோகிக்ளின் நிலை இருந்தா

லன்றோ அவர் செய்த ஸ்தோத்ரம் அத்தகையச் சிறப்பைப் பெறும். ஆகையால் யோகிகளுக்குள்ள மநோSவஸ்தா விசேஷத்தைப் பெற்றிருப்பதாகத் தம்மை இங்கே பேசினர். இப்படி ஸ்தோத்ரம் சிறந்ததாயினும் யோகாப்யாஸத்திற் குரிய தேசம் வேணுமே. அங்கிருந்து செய்யும் யோகமன்றோ பலிப்பது என்ன, அவ்விததேசமே ஸ்ரீரங்கமென்கிருர் ரங்காஸ்தாநே இத்யாதியால். ஃ௨நாzந௱கூ௫௵ என்று உபநிஷத்துச் சொன்னபடி மனதைக் கட்டுப்படுத்தக்கூடிய அழகும் சிறப்பும் வாய்ந்தது ஸ்ரீரங்கமென்றபடி. ஈஜிதா ஶஸஷவி௴த என்றவித்தால் சுபாச்ரயமான அழகிய மணவாளனுடைய திருமேனியின் திவ்யஸௌந்தர்யமும், ஈவிகூ ஃஹிதெ என்றதால் ஶூா஢யஂடு௧ வ௨ஂ ௧ என்ற சிறப்பு வாய்ந்தவர்களின் ஸாந்நித்யமும், ஈஜூ௱ஷு௱டு௫ என்றதால் ராஜோபசாரப்ரக்ரியையில் நடக்கும் நித்யோத்ஸவாதிகளும் தோன்றி, எல்லோருடைய மநஸ்ஸையும் லயிக்கப்பண்ணி பக்தி யோகத்திற்குரியதாக்கும் இத்தேசம் என்று ஸூசிப்பிக்கின்றன.

கூநு௱ய௳கூயடுநா௲ஂO௱ ஷ்வ௳டுயெவா௲ கூ௱ஂ௦லிகா ।

14) "நீர்புரைவண்ணன் பொருள் விஷயத்தில் ஈட்டையும் சேர்த்தே நாம் தூஷித்திருக்கிறோம்" என்கிருர்கள். இது விப்ரலம்பம். பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானத்திலுள்ள துயுக்தமன்று என்றுதேசிகன் ஸாதித்திருக்கிருரென்றோம். தேசிகனுடைய திருவுள்ளத்தை விவரிப்பதன்றி நூமாகச் செய்யும் தூஷணமொன்றிலது. இந்த விமர்சம் ஈட்டையும் ஸ்பர்சிக்கிறதென்னில் அதனல் என்ன? இரண்டு ஆசார்யர்களுக்குள் அபிப்ராயபேதமிருந்தால் இவர் திருவுள்ளமிது, அவர் திருவுள்ளமது என்று விட்டுப்போகிறோம். அஸூ

யையும் தூஷணுபிஸந்தியுமிருந்தாலன்றே அபசாரப்ரஸக்தியும் க்லேசமும் உண்டாவது. இதைச்சொல்வது கேவலம் பேதோபாயாவலம்பநேச்சையாலே என்பது ஸ்பஷ்டம். இதற்கு விவேகிகள் ஒருவரும் வச்யராகார்கள்.

15) 'ரகுவம்சம் குமாரஸம்பவம் மேகஸந்தேசம் போன்ற நூல்களில் விமர்சம் செய்துபோருவது யுக்தம்' என்கிறார்கள். ரகுவம்ச விமர்சம் செய்யும்போதும் பலாத் சண்டைக்கு வந்து நாம் தூஷ்ணீமிருந்தும் பல வருஷங்களுக்குப் பிறகு மறுபடியும் அதைக்கிளப்பி க்ராமஸிம்ஹம் என்று ஸம்பாவனை செய்து ஐந்தாறு லேகங்கள் வெளியான பிறகு உள்ளபொருளை உணர்ந்து 'இந்த விசாரம் எதற்கு? காக தந்த பரீக்ஷைக்கும் இதற்குமென்ன விசேஷம்' என்று முடித்த மஹான்களே யாயிற்றே இவர்கள்!

> 'இனி நான் அந்த வம்புக்கு வரவில்லை. நான் எழுதுவதற்கும் நீ பதில் எழுதவேண்டாம்'

என்பது கருத்தாயின் ஆசார்யஜயந்தி மலரில் நம்முடைய விமர்சத்தில் குற்றம் சொன்னதேன்? தெங்கலை திருமண் காப்பை அதில் தூஷித்தோமா? பாத்ரத் தனியனைப் பரிஹஸித்தோமா? திருநாள்பாட்டு தப்பென்றேமா? வாழி திருநாமம் வழுவுள்ளதென்றேமா? வெறும் கலஹாரம்பமன்றோ அது?

பாண்டித்யேऽபி நம்ரத்வே பாண்டித்யாநாமவஜ்ஞயா ।
பரீவாதேந க்ருஷ்ணஸ்ய பாரம்யம் ப்ரதிபாதிவ ॥

ந து ப்ரேக்ஷாவதாமேஷ ஸ்தைர்யஜாநாம்
ந வ்ருத்தாநாம் ஸாதுவ்ருத்தாநாம் ।
ந ஸாதுநாம் ஸத்வயுக்தாநாம்
ஸ்ரீமத்ஸ்வாமி பக்த ஸ்ரீவைஷ்ணவாநாம் ! ॥

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

26—11—51ல் வெளியான ஸ்ரீமடஸௌபாக்யம் என்ற புஸ்தகத்தின் ஓர் பகுதியான 'ஸௌஜந்ய ஸௌரபம் - ஒடும்புள்ளேறி ப்ரமேய விமர்சம்' என்பதற்கு ப்ரதிவசநமான இரண்டாவது அநுபந்தம் முற்றிற்று.

பிழைத் திருத்தம்.

பாகம்	பக்கம்	வரி	திருத்தம்
1	101	6	[illegible]
2	16	15	[illegible]
	21	11	[illegible]
	28	3	[illegible]
	29	14	[illegible]
	44	24	உணரச்
	51	21	ச்ரேயஸ்
	52	21	ஸூசிப்பித்தோம்...என்றவித்தால்.

வைதிக மந்த்ரங்களுக்குப் போலே ஸர்வச்ராவ்யதை உண்டு என்கிற ஒரு விஷயவிசேஷத்தை ஸ்வாமி இங்கே இதை உதாஹரித்து வெளியிட்டார்.

𑌸𑌤𑌿 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌯𑌾𑌂 𑌗𑍁𑌰𑍁𑌗𑍌𑌰𑌵𑌸𑍍𑌯 𑌵𑌿𑌧𑌿𑌤𑍍𑌰𑌾 𑌓𑌤𑌿𑌵𑌿𑌹𑍁𑌓𑌃 ।
𑌶𑍁𑌂𑌯𑌾𑌃 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌗𑍁𑌣𑌿 𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌗𑌦𑌦𑍍𑌗𑍁𑌣𑌾𑌂 𑌤𑌾𑌂
𑌸𑌮𑍇𑌹𑌤𑌕𑌃 ॥

2) இதுபோல் மற்றொரு தூஷணம் செய்யப்புகுந்து ஒருவரும் ஸமாதாநமே சொல்லமுடியாதென்று தோன்றும்படி பெரும் ஆர்ப்பாட்டத்துடன் ''ஸச்சரித்ரரக்ஷையில் 'மஹாதேவாய' என்று ஸமஸ்தபதமாக இருந்தால்தான் சிவனுக்கு போதம் வரும். **வ்யஸ்தமாக இருந்தால் வராது** என்று எழுதினர். இவரே பாதுகா ஸஹஸ்ரத்தில் 'நமதி மஹதி தேவே' என்று சிவனை நோக்கியே வ்யஸ்தப்ரயோகம் தாமே பண்ணினர். இதனால் ஸச்சரித்ர ரக்ஷையில் பண்ணின வாதத்திற்கு ஜலாஞ்ஜலிதானே ஆயிற்று ?'' என்றார்கள். இது வெகுகாலமாய்ப் பாடப்பட்ட பழம்பாட்டு. இதற்குப் பதில் 1948ம் ஞு ஜனவரி-பிப்ரவரி உத்யாநபத்ரிகை ஸஞ்சிகையில் ஸ்பஷ்டமாய்ச் சொல்லியிருக்கிறோம். அதற்கு மேல் ஒன்றும் சொல்லாமல் மறுபடியும் வெறும் தூஷணமாத்ரத்தைச் செய்வது எவ்வளவு ப்ராமாணிகம்? ஸச்சரித்ர ரக்ஷையில் 'வ்யஸ்தமாக இருந்தால் போதம் வராது' என்று ஸ்வாமி ஸாதித்திருக்கிறாரா ? இப்படிப் பச்சைப் பொய் பேசியாவது தூஷிப்பதில் ஏன் அவ்வளவு அபிநிவேசம் ? தைவமில்லையா ? தண்டனையே கிடைக்காதா ? உலகம் அவ்வளவு மூடமா ? நெஞ்சு கல்லா ? '𑌵𑍋𑌪𑌾𑌯𑌨𑌾𑌦𑌿𑌷𑍁 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵𑌶𑌬𑍍𑌦𑌸𑍍𑌯 𑌵𑍍𑌯𑌸𑍍𑌤𑌵𑌿𑌰𑍋𑌧𑍇 𑌦𑍃𑌷𑍍𑌟𑌪𑌰𑍋𑌧𑌾 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌨𑍍𑌨 𑌸𑌤𑍍𑌯𑌂 । 𑌪𑍍𑌰𑌕𑌰𑌣𑌾𑌦𑌿𑌵𑌶𑌾𑌤𑍍 𑌤𑌤𑍍𑌰 𑌤𑌯𑌾 𑌨𑌿𑌰𑍍𑌣𑌯𑌃 । 𑌕𑍁𑌤𑍍𑌰 𑌤𑌦𑍍𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌮𑍇𑌵' என்றல்லவோ அங்கு ஸ்வாமி ஸாதித்திருப்பது. வ்யஸ்தத்திற்கு ரூடிசக்தி இல்லையெனப்பட்டதே தவிர ப்ரகாராந்தரத்தாலே போதமே வராது எனப்படவில்லை என்பதை க்ரஹிக்க சக்தி இல்லையா ? இப்படி தூஷிப்பவர்கள் சிசுபாலராவணநுஸாரிகள் என்பது தானே 600 வருஷங்களாக

ப்ரஸித்தமாய் சிலாசாஸநம் பண்ணப்பட்டிருக்கிறது. 'அவர்கள் தாம் புலையர் போலும்' 'மிண்டர்', 'பாவகாரிகள்' என்ற ஆழ்வார்கள் போலவன்றோ ப்ரதிவாதிபயங்கரம் அண்ணன் **கிம் நாவித்ருஶ்ருதௌ வேத்யாராவணாநுஸாரிணாம்** என்று இப்படி ஸாதித்திருக்கின்றார். இதை அபலபிக்க யாரால் முடியும்? **நீசோ யதா ஜோவநே நஹி நிஸ்ஸ்ருதோ ஹாஸ்ய:।** கீதோபதேசத்திற்காகவே ஸ்ரீ க்ருஷ்ணவதாரமென்றது போல் ஸ்ரீமத்ரஹஸ்த்ரயஸாரத்திற்காகவே யன்றோ ஸ்ரீ வேதாந்த தேசிகாவதாரம். **தத்ராஜ்யேகஃ, தத்வேத்ருகஶேகஃ**, ஓரொன்று, ரஹஸ்யத்ரய ஸாரகங்காம், என்று அவிச்சிந்நமாய், இப்போது புதியஸம்ப்ரதாயத்திலிருப்பவர்களுக்கெல்லாம் மூல புருஷர்களான பெரியோர்களால் அந்த ஸம்ப்ரதாய ரஹஸ்ய க்ரந்தங்களில் ஒன்றையும் கண்டெடுத்தும் பாராதே புகழப்பட்டதன்றோ விது. இதைப் பற்றி இப்போது அநபிஜ்ஞர் செய்யும் அவமதியால் வரும் அவத்யமென்ன? **கஷய ரயதா ஶ்ருஷிபிஃ கஶய கிம் நஹஃ க்ஷாஹ்யதே। கவரிவி தஸம் ஹ்ஷாஷெபோவிஜிதயதிராஜஸூக்திதாதவ் யெரூஃ கஜஶஜஶநெர்ஃ** என்று தொட்டையாசார்யர், விஷயத்தை ஸ்பஷ்டமாய் விளக்கியிருக்கின்றார். இதைவிட வேறு யார் என்ன சொல்லவேண்டும். 'இது தொட்டையாசார் க்ருதி அன்று' என்று சொல்வது தானே பிறர்க்கு இங்கு வழி. ஸ்ரீராமானுஜன் ஸ்ரீ பாஷ்யம் எழுதவே இல்லை. அவர் அத்வைதி தான் என்று ஒருவன் சொன்னால் அவனைத் தடுக்க வல்லார் யார்?

3) வாத்ஸல்யார்த்தப்ரகாசிகை, **கஹிநவஷயாஶுதகம்**, இவை முன்பே வெளிவந்து கண்டிக்கப்பட்டவை. 1948-ம் வருஷம் முதல் வெளிவரும் உத்யான பத்ரிகையில் ப்ரதிபோதநம் என்று மகுடமிட்டு இவற்றிலுள்ள அபஸித்தாந்தங்களை யெல்லாம் நிரஸித்திருக்கின்றோம். மறுபடியும் இவற்றை இப்போது அப்படியே வெளியிடுவது எதற்காக? லோக வஞ்சனைக்காகத் தானே? 'பரமாத்புதம்' என்ற துண்டுப்ரசுரமும் மறக்கப்[illegible]ராது.

4) இந்த (Feb. 52, 59-64) வைதிக மநோஹராவில் மற்றொரு விசித்ர நிருபணமும் இருக்கின்றது. '**ஹெ தாவெருயெ**

விஶேஷ' உபேக்ஷா (ந்யாஸதிலகவ்யாக்யாயாம்) ஸ்வா ஸாத்யே । ஸதி தத்ஸம்பவே அபேக்ஷாநிஷேத' என்று. 'ஸேயம் உபாயதா ஸத: கிந்து ப்ரக்ருதிகோசரா:' என்கிறவிதில் ஸேயம் உபாயதா ஸத: என்பது பூர்வபக்ஷம். ஸத்துக்களுக்கு உந்நதத்வம் கிடையாது என்பது இங்கே விவக்ஷிதம்'' என்பவர்கள் இவர்கள் என்ருகின்றது. இதற்கு மேல் நாம் சொல்லவேண்டியது என்ன இருக்கின்றது? 'கிந்து ப்ரபத்திக்கு வேத்யாகாரம் இதர நிரபேக்ஷோபாயத்வம்' என்றவித்தால் பக்திக்கு இது இல்லை என்பது தவிர ப்ரபத்திக்கு முன் சொன்ன உபாயத்வமில்லையென்று எப்படி கிடைக்கும் என்று ஆலோசிக்கத் தோன்ருதவர்கள் எந்த நூலையும் எந்த விஷயத்தையும் பற்றிப் பேச, எழுதச் சிறிதும் தகுதியற்றவர்கள், என்பதை எளிதில் யாவருமறிவர். இவ்வளவு அஸங்கதமாய் எழுதின இது ஒன்றுக்காகவே ஜிஹ்வாச்சேதார்ஹவசஸி ஷண்டத்வம் ததா ஶ்ரிதா ।

5) ஒரே க்ரந்தகாரருடைய ஒரு வாக்யத்திற்குத் தனக்குத் தோன்றியபடி ஒரு பொருள் கூறிவிட்டு, 'மற்ருெரு வாக்யம் விரோதிக்கிறதே' என்று பிறர் கேட்கும்போது 'ஸ தாவத்ப்ரஷ்டா விசார:, தவைவ போதநீயா:' என்று பதில் சொல்லுகிறவர்கள் பொறுப்பில்லாத,விவேகமில்லாத,வெறும்பாலர்களேயன்றிப்ரௌடபண்டிதர்களாகமாட்டார்கள். 'தேவுமற்றறியேன்' என்ற மதுரகவி தைவவிஷயத்தில் மஹா நாஸ்திகர். 'தேவபிரானுடைத் திருவுருக் காண்பன் நான்' என்று அவரே சொல்லுகிருரே என்னில் 'அது வேறு விஷயம். அவரையே கேட்கவேணும்' என்றும், ''அரியையயனையரனை அலற்றி' என்ற ஆழ்வார் ஹரேரேவ ஶ்ரேஷ்ட்யம் ப்ரதிஷ்டாபிதம் யா ஸா । என்ற காளிதாஸ மதாவலம்பியே. பேசநின்ற சிவனுக்கும்........நாயகனவனே யென்கிருரே அவரென்னில் அது வேறு விஷயம். அவரையே கேட்டுத்தெளிக'' என்றும் கோஷிப்பவர்களுக்குள்ள மதிப்புத்தான் இவர்களுக்கு உண்டு.

6) மற்ற விஷயங்களும் க்ரமேண விசாரிக்கப்படும். ஸமஸ்த்ரோஹத்தைப் பற்றிப் பேசும் போது உத்யாநபத்ரிகை 19. 11-12 ஸஞ்சிகையில் ப்ரசுரமான மாரீச பக்த அந்தகார ஸுஹ்ருத்துக்களு

டைய ச்லோகங்களை ஸ்மரிக்கவும். அவையாவன—

[illegible]

[illegible]—

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ।
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

[illegible]—

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ।
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

[illegible]
[illegible] ।

கர, பங்குனி, 1. **நாயினும் நீசன்.**

ஸ்ரீநிவாஸ பிரஸ், திருவையாறு கா. 500